விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka
# வலம்புரி
Valampurii
E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 087 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 02 வெள்ளிக்கிழமை (15.03.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




### வெடுக்குநாறிமலை ஆலய பூசகர் உள்ளிட்ட
## ஐவரின் உணவுத் தவிர்ப்பு
### 3ஆவது நாளாக தொடர்கின்றது

(வவுனியா)

வெடுக்குநாறிமலைத் தாக்குதல் சம்பவத்துக்கு நீதி கோரி வெடுக்கு நாறிமலை ஆலய பூசகர் உள்ளிட்ட ஐவரின் உணவுத் தவிர்ப்பு நேற்று மூன்றாவது நாளாகவும் தொடர்கின்றது.

வெடுக்குநாறிமலையில் சிவராத்திரி வழிபாடுகளில் ஈடுபட்டபோது கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டவர்களில் பூசகர் உள்ளிட்ட 5 பேரின் உண்ணாவிரத போராட்டம் நேற்று மூன்றாவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டு 15

## வட்டுக்கோட்டையில் இளைஞன் கடத்தி வெட்டிப் படுகொலை
### கடற்படையும் உடந்தையா? சி.சி.ரிவி காணொளியால் பரபரப்பு



(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டையில் இளைஞன் கடத்தப்பட்டு வெட்டிப் படுகொலை செய்யப்பட்டது தொடர்பான சி.சி.ரிவி காணொளி வெளியாகியுள்ளது. 02

### வடக்குத் தலைவர்கள் ஒன்றிணைந்தால்
# மீனவர் பிரச்சினைக்கு தீர்வு காண முடியும்
### மீன்பிடி இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த



(கொழும்பு)

வடக்கிலுள்ள அரசியல் தலைவர்கள் அரசாங்கத்துடன் இணைந்து இந்தியாவுடனான பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டால் மீனவர் பிரச்சினைக்கு குறுகிய காலத்துக்குள் தீர்வு காண முடியும் என்று மீன்பிடித் துறை இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த டி சில்வா தெரிவித்துள்ளார், (16ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தலை ஒத்திவைக்க இணங்கோம்
### பசில் தெரிவிப்பு

(கொழும்பு)

தேர்தல்கள் இரண்டையும் ஒத்திவைப்பதற்கு ஒரு போதும் இணங்கப் போவதில்லை என ஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுனவின் ஸ்தாபகர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். 02

### இரு பிள்ளைகளை
## கழுத்தறுத்து கொன்ற தந்தை
### அம்பாறையில் பரபரப்பு

(அம்பாறை)

தந்தை ஒருவர் தனது இரு பிள்ளைகளையும் கழுத்தறுத்து கொலை செய்துவிட்டு தற்கொலை முயற்சி மேற்கொண்ட சம்பவம் அம்பாறை 15


### வடக்கு உட்பட நாட்டின் பல பகுதிகளில்
## வெப்பநிலை இன்று மேலும் அதிகரிக்கும்

(யாழ்ப்பாணம்)

வடக்கு உட்பட நாட்டின் பல பகுதிகளில் வெப்பநிலை இன்று அதிகரித்துக் காணப்படும்.


இதனால் மக்களை அவதானமாக இருக்குமாறும் வளிமண்டலவியல் திணைக்களம் கேட்டுக் கொண்டுள்ளது. 15

### யாழ்.பல்கலையின் 38ஆவது பொதுப் பட்டமளிப்பு




03

## வெடுக்குநாறி ஆலயப் பிரச்சினை தொடர்பில் ஒன்றுகூடி ஆராய வருக
### தமிழ் எம்.பிக்களுக்கு விக்னேஸ்வரன் அழைப்பு



(யாழ்ப்பாணம்)

வெடுக்குநாறிமலை ஆலயப் பிரச்சினை தொடர்பாக ஒன்றுகூடி ஆராய்வதற்குத் தமிழ்த் தேசியம் சார்ந்த பாராளுமன்ற உறுப் 15

## ஒட்டுசுட்டானில் துப்பாக்கிச் சூடு
### சந்தேகத்தில் ஒருவர் கைது



(முல்லைத்தீவு)

பொலிஸாரின் உத்தரவை மீறிச் சென்ற டிப்பர் வாகனம் மீது துப்பாக்கிப் பிரயோகம் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து பொலிஸார் சந்தேகநபரை நேற்றுக் கைது செய்துள்ளனர். 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் மாநகர சபை பகிரங்க ஏல விற்பனை

யாழ் மாநகரசபையின் 2023 ஆம் ஆண்டுக்கான வருடாந்த பொருட் கணக்கெடுப்பில் விற்பனை எனக் காட்டப்பட்ட பொருட்களின் பகிரங்க ஏலவிற்பனை எதிர்வரும் 2024.03.28 ஆந் திகதி காலை 10.00 மணிக்கு மாநகரசபை வளாகத்தில் நடைபெறவுள்ளது. பொருட்களை பார்வையிட விரும்புவோர் 2024.03.27 ஆந் திகதி அலுவலக நேரத்தில் பார்வையிடலாம். ஏலத்தில் பங்குபற்ற விரும்பின் மீளளிக்கப்படாத வைப்புத்தொகையாக ருபாய் 590.00 செலுத்தி ஏலத்தில் பங்குபற்ற முடியும்.

**மாநகர ஆணையாளர்,**
**மாநகர சபை,**
**யாழ்ப்பாணம்.**

(C-8531)

# கேள்வி அறிவித்தல்

## இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு சாவகச்சேரி பிரதேச சபை, வட மாகாணம்

## Supply of 900 Nos of LED Bulb (30W) and 200 Nos of Light Control Sensor For Street Lamp

1. கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள **LED Bulb (30W)** மற்றும் **Light Control Sensor for Street Lamp** விநியோகிப்பதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து முத்திரை குறி பொறிக்கப்பட்ட கேள்விகளை சாவகச்சேரி பிரதேச சபை, கொடிகாமம். வடமாகாணம் சார்பில் உள்ளூராட்சி மன்ற பெறுகைக் குழு தலைவர் கோருகின்றார்.
2. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
3. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் செயலாளர், சாவகச்சேரி பிரதேசசபை, A9 வீதி, கொடிகாமம் **(தொலைபேசி : 021-205 0348, 021 205 0356 தொலைநகல் : 021-205 0348** இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் 2024.03.15 தொடக்கம் 2024.04.04 வரையான காலப்பகுதியில் வேலைநாட்களில் காலை 09.00 மணிமுதல் 15.00 மணி வரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
4. குறிப்பிட்ட வகை துறை குறியீட்டுப்பெயரில் விற்பனை மற்றும் நாடளாவிய ரீதியில் பராமரித்தல் தொடர்பாக குறைந்தபட்சம் மூன்று வருட அனுபவத்தினை கொண்டிருத்தல் வேண்டும். மேலதிக தகவல்கள் கேள்வி ஆவணத்தில் வழங்கப்படுகின்றது.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கிலமொழியிலான "பூரணமான கேள்வி ஆவணங்களின்" பூரணமான தொகுதி ஒன்றை **செயலாளர், சாவகச்சேரி பிரதேசசபை, A9 வீதி, கொடிகாமம்** எனும் முகவரியில் **2024.03.15** ஆம் திகதியிலிருந்து **2024.04.04** ஆம் திகதி வரை காலை 09.00 மணிக்கும் மாலை 15.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு கேள்வி ஆவணத்திற்கும் ரூபா. 2,000.00 செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத் தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
6. பூரணமான கேள்வி ஆவணத்தினை இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதி, நகல்பிரதி என தனித்தனி உறைகளிட்டு **செயலாளர் சாவகச்சேரி பிரதேசசபை, A9 வீதி, கொடிகாமம்** எனும் முகவரிக்கு 2024.04.05 ஆம் திகதி மாலை 10.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
7. கேள்விகள் தொடர்பான முன்னோடிக் கலந்துரையாடல் **2024.03.25** ஆம் திகதி **14:00** மணிக்கு **சாவகச்சேரி பிரதேச சபை, A9 வீதி, கொடிகாமம்,** இல் தலைமையலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் அனைவரும் இக்கலந்துரையாடலில் பங்குபற்றலாம்.
8. கேள்வி ஆவணம் செல்லுபடியாகும் காலம் கேள்வி விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து **49 நாட்கள்** வரை ஆகும். அத்துடன் கேள்விப்பிணை வைப்பானது நிபந்தனையற்றதும் தேவைக்கேற்ப வங்கி உத்தரவாதமாகக் காணப்படுவதுடன் **2024.06.20** ஆம் திகதி வரை செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்.
9. கேள்விப்பிணை வைப்புத்தொகையானது கீழ் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு அமையும்.
10. தெரிவு செய்யப்பட்ட வழங்குனர்கள் **சாவகச்சேரி பிரதேச சபை, A9 வீதி, கொடிகாமம்** என்னும் முகவரியில் பொருட்களை விநியோகித்தல் வேண்டும்.

| தொ.இல | கேள்வி ஆவண இலக்கம் | பொருளின் பெயர் | ஒப்பந்தக் காலமும் ஒப்பந்தத் தொகையும் | கேள்வி செல்லுபடிக் காலம் | கேள்விப்பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | தொகை | செல்லுபடியாகும் காலம் |
| 1 | NP/14/41(06)Acc/Purchase/2024 | Supply of 900 Nos of LED Bulb (30W) and 200 Nos of Light Control Sensor for Street Lamp | 1 month (2 Mn ) | 49Days | 20,000.00 | 20.06.2024 |

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**சாவகச்சேரி பிரதேச சபை,**
**A9 வீதி, கொடிகாமம்.**

**15.03.2024** (C-8532)

## ஒட்டு சுட்டானில்...

குறித்த சம்பவம் முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பகுதியில் நிகழ்ந்துள்ளது.

டிப்பரின் சக்கரங்களில் துப்பாக்கிச் சூடு நடத்தி அதனை தடுத்து நிறுத்தியதாக ஒட்டுசுட்டான் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாரும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரும் இணைந்து இந்த நடவடிக்கையில் ஈடுபட்டதாக தெரிவிக்கப் படுகின்றது.

குறித்த டிப்பர் வாகனம் பொலிஸாரை விபத்திற்கு ஆளாக்க முயற்சித்ததாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்படவுள்ளார். (ம-7,10)

## வட்டுக்கோட்டை...

இதில் கடத்தல்காரர்களுக்கு கடற்படையினர் உதவி செய்வது போன்ற காணொளி வெளியாகியுள்ளதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

தனது மனைவியுடன் காரைநகர் பகுதிக்கு திங்கட்கிழமை மோட்டார் சைக்கிளில் சென்று விட்டு, தனது வீடு நோக்கி திரும்பிக்கொண்டிருந்த இளைஞனையும் அவரது மனைவியையும் பொன்னாலை பால பகுதியில் உள்ள கடற்படை முகாமிற்கு அருகில் வைத்து, வன்முறை கும்பல் ஒன்றினால் வாகனத்தில் கடத்தி செல்லப்பட்டு . இளைஞன் மிக மோசமான சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு, படுகொலை செய்யப்பட்டார்.

கடத்தி சென்ற இளைஞனின் மனைவியை சித்தன்கேணி பகுதியில் இறக்கி விட்டு வன்முறை கும்பல் தப்பிச் சென்று இருந்தது.

வன்முறை கும்பல் தம்மை வழி மறித்து, தாக்கி கடத்த முற்பட்ட வேளை , தாம் உதவிகோரி கடற்படை முகாமிற்கு சென்றவேளை அங்கிருந்த கடற்படையினர் தம்மை தாக்கி விரட்டினர் எனவும், தனது கணவரின் படுகொலைக்கு கடற்படையினரும் காரணம் என படுகொலை செய்யப்பட்ட இளைஞனின் மனைவி தெரிவித்து இருந்தார்.

இந்நிலையில் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வந்த நிலையில், கடற்படை முகாமில் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்பு கமரா காணொளிகளை புலனாய்வாளர்கள் பெற்று விசாரணைகளை முன்னெடுத்தனர்.

காணொளியில், இளைஞனும் மனைவியும் தஞ்சம் கோரி முகாமுக்கு ஓடி வருவதும், அங்கு கடற்படையினர் அவர்களை தாக்குவதும், வன்முறை கும்பல் கடற்படையின் கண் முன்னே முகாம் பகுதியில் வைத்தே கணவன் மனைவியை கடத்தி செல்வதும் பதிவாகியுள்ளது.

கடற்படையினர் துப்பாக்கிகளுடன் கடத்தல்காரர்களுக்கு உதவி செய்வது காணொளியில் தெளிவாக பதிவாகியுள்ள நிலையில் கடத்தலுக்கு கடற்படையினர் உதவினார்கள் என மனைவியின் குற்றச் சாட்டுக்கு காணொளி வலு சேர்த்துள்ளது. (ம-7,10,33)


**லங்கா மஹால்(PVT) LTD**

உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை



லண்டன் - 990/=
பிரான்ஸ் - 1890/=
ஜேர்மனி - 1790/=
கனடா - 2290/=
அவுஸ்திரேலியா - 2450/=
சுவிஸ் - 2090/=
இந்தியா - 990/=

இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை. (087)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.
இந்தியா தொடர்புகளுக்கு :
0091956615671 9

WESTERN UNION WU MoneyGram. Ria MONEY TRANSFER
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

40,கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
077 8393 974


## தேர்தலை...

ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர் காணலிலேயே அவர் இதனை தெரிவித் துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னதாக பொதுத் தேர்தலை நடத்த வேண்டும்.

எனவே தேர்தல் ஒன்று நடத்தப்பட வேண்டும் என்பதே எமது நிலைப் பாடாகும்.

தற்போதைய அரசாங்கம் பொதுஜன பெரமுனவின் அரசாங்கமா என்பதில் தமக்கு சந்தேகம் உள்ளதாகவும் பசில் ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார். (ம-7,10)

# மரண அறிவித்தல்

## சிதம்பரப்பிள்ளை கந்தையா



பிறப்பு : 01.10.1936 | இறப்பு : 14.03.2024

பலாலியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்காலிகமாக ஆவரங்காலில் வசித்தவருமாகிய சிதம்பரப்பிள்ளை கந்தையா அவர்கள் நேற்று (14.03.2024) பலாலியில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சீனியர் சிதம்பரப்பிள்ளை - புதினாச்சிப்பிள்ளை தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற சின்னையா - ஆச்சிப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும் செல்லத்தின் அன்புக் கணவரும் திருமதி ஜெ.செல்ல கந்தராணி, நல்லைக்கந்தராணி, மாவைக் கந்தராணி, செந்தமிழ்க் கந்தராசா, செல்லக்கந்தராசா, மதுராம்பிகை ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ஜெகதீசன் (ஈசப்பா), கணேசநிதி, நிமலன், வேணுஜா, தர்சிகா ஆகியோரின் அன்பு மாமனாரும் நதீசன், மதீசன், கஜேஸ், காவியா, விதுசானி, லபிசா, தீபிசா, அத்விகா, மஞ்சரி, சங்கவி, சிறிசரன், வர்சான், ஷாரிஸ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.03.2024) வெள்ளிக்கிழமை அன்னாரின் பலாலி இல்லத்தில் 12.00 மணியளவில் நடைபெற்று பலாலி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

பலாலி கிழக்கு,
வசாவிளான்.

(079)

தகவல்:-
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.பல்கலையின் 38 ஆவது பொதுப்பட்டமளிப்பு




(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் 38 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவின் முதல் நிகழ்வு நேற்று பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கில் பல்கலைக்கழக வேந்தர் வாழ்நாள் பேராசிரியர் சி.பத்மநாதன் தலைமையில் ஆரம்பமாகியது.

இந்தப் பட்டமளிப்பு விழாவின் போது 2 ஆயிரத்து 873 பேருக்குப் பட்டங்கள் வழங்கப்படவுள்ளன. அத்துடன் 46 தங்கப் பதக்கங்கள், 9 புலமைப் பரிசில்கள் மற்றும் 48 பரிசில்களும் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-33)

# தெற்காசியாவில் அதிக நீரிழிவு நோயாளர்களை கொண்ட நாடாக இலங்கை-சுகாதார அமைச்சர் தகவல்

(கொழும்பு)

**தெற்கு ஆசிய பிராந்தியத்தில் அதிகளவான நீரிழிவு நோயாளர்கள் காணப்படும் நாடாக இலங்கை இனங்காணப்பட்டுள்ளது.**

அளவுக்கதிகமான சீனி மற்றும் பால்மா பாவனையே இதற்கான பிரதான காரணமாகும் என்று சுகாதார அமைச்சர் வைத்தியர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார்.

சீனி இறக்குமதிக்காக 300 மில்லியன் டொலரும் பால் மா இறக்குமதிக்காக 350 - 400 மில்லியன் டொலரும் ஒதுக்கப்படுகிறது.


எனவே இவற்றின் பாவனையைக் குறைப்பதன் மூலம் சுகாதாரத்துறைக்கு மாத்திரமின்றி பொருளாதாரத்துக்கும் பாரிய ஒத்துழைப்பினை வழங்க முடியும் என அமைச்சர் ரமேஷ் பத்திரன சுட்டிக்காட்டினார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம் மற்றும் புற்றுநோய் உள்ளிட்ட நோய்கள் நாட்டு மக்கள் மத்தியில் அதிகரித்துள்ளன.

இவை தொடர்பில் மக்களுக்கு தொடர்ந்தும் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியது அவசியமாகும் என அவர் தெரிவித்தார். (நி-5-6)

# பிரபல கிரிக்கெட் வீரர் லஹிரு பயணித்த வாகனம் விபத்தில் சிக்கியது



(கொழும்பு)

இலங்கை அணியின் முன்னாள் துடுப்பாட்ட வீரர் லஹிரு திரிமான்னே பயணித்த வாகனம் நேற்று அதிகாலை அநுராதபுரம், திரப்பனே பகுதியில் விபத்துக்குள்ளானது.

குறித்த வாகனம் திரப்பனை 117 மைல் அஞ்சல் பகுதிக்கு அருகில் எதிர் திசையில் பயணித்த லொறி மீது மோதியதில் இவ் விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த விபத்தில், திரிமான்னேவுக்கு சிறு காயங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தற்போது பாதுகாப்பாக இருப்பதாகவும் முன்னாள் கிரிக்கெட் வீரருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (நி-5-6)

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கு சலுகை வட்டி விகிதத்தில் கடன்

(கொழும்பு)

நாட்டில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு சலுகை வட்டி விகிதத்தில் கடன் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் அனுபா பாஸ்குவல் குறிப்பிட்டுள்ளார்.

சமுர்த்தி வங்கியின் ஊடாக கடன் வழங்கப்படவுள்ளதாக அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

இதன் முதற்கட்டமாக முன்னோடி வேலைத்திட்டத்தின் கீழ் களுத்துறை மாவட்டத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது. (நி-5-6)

## பசில், ஹக்கீமுடன் இந்திய தூதுவர் சந்திப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ஷ மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ரவூப் ஹக்கீம் ஆகியோருடன் இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் சந்தோஷ் ஜா சந்திப்பு நடத்தியுள்ளார்.

நேற்று முன்தினம் தனித்தனியாக இந்த சந்திப்பு இடம் பெற்றுள்ளது.

இச்சந்திப்பின்போது அரசியல் உட்பட பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. (நி-5-6)

# அத்தியாவசிய உணவுப்பொருட்கள் சிலவற்றின் விலை குறைப்பு

(கொழும்பு)

அத்தியாவசிய உணவு பொருட்கள் சிலவற்றின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளது.

இதன்படி, ஒரு கிலோகிராம் வெள்ளை சீனியின் விலை 300 ரூபாவிலிருந்து 265 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளதாக அத்தியாவசிய உணவுப் பொருட்கள் இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அத்துடன் மா ஒரு கிலோகிராம் 190 ரூபாவிலிருந்து 175 ரூபாவாகவும் பருப்பு ஒரு கிலோகிராம் 350 ரூபாயிலிருந்து 285 ரூபாயாக குறைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5-6)

# 10 நாட்களில் மாத்திரம் 67,000 சுற்றுலாப்பயணிகள்

(கொழும்பு)

இந்த மாதத்தின் கடந்த 10 நாட்களில் மாத்திரம் 67,114 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், ரஷ்யாவில் இருந்து வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்து வருவதாக அந்த சபை குறிப்பிட்டுள்ளது. (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# விக்ரம் - ராஜன் - கங்கு வெற்றிக்கிண்ணம்
# வெற்றிவாகை சூடியது கே.சீ.சீ.சீ அணி



முதலாமிடம் கே.சீ.சீ.சீ



இரண்டாமிடம்-கிறஸ்கொப்பர்ஸ்


தொடர் ஆட்டநாயகன் துஸ்யந்தன்


ஆட்டநாயகன், அதிக இலக்குகள் சாம்பவன்


தொடரில் ஆகக்கூடிய ஓட்டம் ஜெயரூபன்

விக்ரம்-ராஜன்-கங்கு வெற்றிக் கிண்ணத்தை 6 ஆவது தடவையாக சுவீகரித்துக்கொண்டது கே.சீ.சீ.சீ அணி.

குறித்த தொடரின் இறுதிப்போட்டி கடந்த 10 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இவ் இறுதிப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற கே.சீ.சீ.சீ அணி முதலில் துடுப்பெடுத்தாடிய போது 40 ஓவர்களில் 7 இலக்குகளை இழந்து 197 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. ஜெயரூபன்-7, நிமலதாஸ்-28, கஜானன் -25 ஓட்டங்களைப் பெற்றனர்.


பந்து வீச்சில் கிறாஸ்கொப்பர்ஸ் அணியை சார்ந்த ரசீகரன்-21 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளையும் சுஜீபன்-42 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும் மதுஸன்-38 ஓட்டங்களைக் கொடுத்து 1 இலக்கினையும் கைப்பற்றினர்.

198 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய கிறஸ் கொப்பர்ஸ் அணி 26.1 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 89 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.


வரலக்ஸன் -30, டிவோஸன்-17, சுஜீபன் -11 ஓட்டங்களைப் பெற்றனர். கே.சீ.சீ.சீ அணியை சார்ந்த சாம்பவன்-32 ஓட்டங்களைக் கொடுத்து 5 இலக்குகளையும் சதுஸன் -3 ஓட்டங்களைக் கொடுத்து 1 இலக்கினையும் கைப்பற்றினர்.

இறுதியில் கே.சீ.சீ.சீ அணி கிறாஸ் கொப்பர்ஸ் அணியை 108 ஓட்டங்களால் வெற்றி பெற்று 6 ஆவது தடவையாக வெற்றிக்கிண்ணத்தை தமதாக்கிக் கொண்டனர்.

விளையாட்டு வீரர்களுக்கான பரிசில்களை யாழ்.பல்கலைக்கழக உடற்பயிற்சி போதனாசிரியர் G.D.மதியழகன் வழங்கியுள்ளார். போட்டியின் தொடர் நாயகனாக கே.சீ.சீ.சீ அணியை சார்ந்த துஸ்யந்தனுக்கும் போட்டியின் சிறந்த வீரராக அம்பலனுக்கும் தொடரில் ஆகக்கூடிய இலக்குகளை கைப்பற்றியவரான அம்பலனுக்கும் தொடரில் ஆகக்கூடிய ஓட்டங்களை பெற்றவருக்கான பரிசிலை கே.சீ.சீ.சீ அணியை சார்ந்த ஜெயரூபன் மற்றும் 2 ஆம் இடத்திற்கான பரிசை கிறாஸ்கொப்பர்ஸ் அணியினருக்கும் 1 ஆம் இடத்திற்கான பரிசை கே.சீ.சீ.சீ அணியினருக்கும் பிரதம விருந்தினரால் வழங்கி வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)



# இந்தியன் வெல்ஸ் ஓபன் டென்னிஸ்
## காலிறுதியில் அல்காரஸ், ஸ்வரேப் மோதல்



அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் இந்தியன் வெல்ஸ் பகுதியில் இந்தியன் வெல்ஸ் ஓபன் டென்னிஸ் போட்டிகள் நடந்து வருகின்றன.

இதில், நேற்று நடந்த ஆண்கள் ஒற்றையர் பிரிவில் ஸ்பெயின் வீரர் கார்லோஸ் அல்காரஸ், ஹங்கேரியின் பேபியன் மரோசா னுடன் மோதியிருந்தார்.

இதில் அல்காரஸ் 6-3, 6-3 என்ற செட் கணக்கில் வென்று காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மற்றொரு போட்டியில் ஜேர்மனி யின் அலெக்சாண்டர் ஸ்வரேவ், அவுஸ்திரேலியாவின் அலெக்ஸ் டி மினாருடன் மோதினார். இதில் ஸ்வரேவ் முதல் செட்டை 5-7 என இழந்தார்.

இதனால் சுதாரித்துக் கொண்ட அவர் அடுத்த இரு செட்களை 6-2, 6-3 என கைப்பற்றி அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளதோடு இன்று நடை பெறும் காலிறுதியில் அல்காரசும், ஸ்வரேவும் மோத உள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூளாய் முத்துக்குமார சுவாமி ஆலய கொடியேற்றம் இன்று

(யாழ்ப்பாணம்)

மூளாய் ஸ்ரீமுத்துக்குமார சுவாமி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் இன்று வெள்ளிக் கிழமை காலை 9.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்ப மாகி தொடர்ந்து 10 தினங்கள் உற்சவங்கள் இடம்பெற வுள்ளது.

எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு தேர்த்திருவிழாவும், 24 ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை காலை 11 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் நடை பெறவுள்ளது. (நி-5-6)

# ஊழல் ஆட்சி முடிவுக்கு வரவேண்டும் ஐ.எம்.எப் இடம் வலியுறுத்தல்

(கொழும்பு)

ஊழல் மோசடிகள் நிறைந் துள்ள ஆட்சியை முடிவுக்கு கொண்டுவர வேண்டுமென ஐ.எம்.எப் இடம் தான் வலியுறு த்தியதாக தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுப்பேரவை உறுப்பினர் சுனில் ஹந்துனெ த்தி தெரிவித்துள்ளார்.



நாட்டிற்கு விஜயம் மேற் கொண்டுள்ள சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுக்கும் தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களுக்கு இடையில் நேற்று விசேட சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

குறித்த சந்திப்பில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்க ளுக்கு கருத்துத் தெரிவித்த போதே சுனில் ஹந்துனெத்தி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது மக்கள் ஆணையில்லாத அரசாங்கத்து டன் இணைந்து செயற்படுவதில் பலனில்லை. இந்த அரசாங்கம் ஆட்சியில் தொடருமானால் நாட் டில் நிலவும் பொருளாதார நெரு க்கடிகளுக்கும் தீர்வு கிடை க்கப்போவதில்லை.

உதாரணமாக நாங்கள் ஒரு விடயத்தை கூறலாம் பாராளு மன்றில் கோப் குழுவின் தலை வராக ரோஹித அபேகுணவர் தனவை நியமித்துள்ளார்கள். இதனூடாக அரசாங்கத்தின் நோக்கம் தொடர்பாகவும் நாம் கவனம் செலுத்தியுள்ளோம். நெருக்கடி நிலையிலிருந்து மக் களை கரைசேர்க்க வேண்டும். அதற்காக மக்கள் ஆணையுடன் அரசாங்கம் ஒன்று அமைக்கப்பட வேண்டும்.

அதேபோன்று கடன்மறு சீரமைப்பு விடயத்தின் தற்போ தைய நிலவரம் தொடர்பாகவும் உத்தியோகபூர்வமாக அறிவிக்க முடியாத நிலையில் அரசாங் கம் உள்ளது. எனவே இந்த விடயம் தொடர்பாக ஐ.எம்.எப் இடம் நாம் பிரதானமாக வின வியிருந்தோம்" என சுனில் ஹந்துனெத்தி தெரிவித்து ள்ளார். (நி-5-6)

# கருத்துச் சுதந்திரத்தை முடக்கும் ஆயுதமாக உள்ளக சட்டங்கள்

## இலங்கை அரசை சாடும் சர்வதேச மன்னிப்புச்சபை

**(கொழும்பு)**

**நாட்டு மக்களின் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தை முடக்குவதற்கான புதிய ஆயுதமாக 'நாட்டின் உள்ளக சட்டங்கள்' இலங்கை அரசாங்கத்தினால் பயன்படு த்தப்படுவதாக சர்வதேச மன்னிப்புச் சபையின் தெற் காசியப் பிராந்திய ஆய்வாளர் த்யாகி ருவன்பத்திரன தெரிவித்துள்ளார்.**

இதேவேளை அரசா ங்கத்தினால் அண்மையில் பாராளுமன்றத்தில் நிறை வேற்றப்பட்ட இணைய பாது காப்பு சட்டம் தொடர்பில் மனித உரிமைகள் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டா ளர்கள் தொடர்ந்து தமது கரிசனைகளை வெளிப்படு த்தி வருகின்றனர் என்றும் தெரிவித்தார்.

மேலும் அரசாங்கம் புதிய சட்டவரைபுகளைத் தயாரிக்கும் போது அதனு டன் தொடர்புடைய தரப்பின ருடன் கலந்துரையாடுதல் உள்ளடங்கலாக உரிய செயன்முறைகளைப் பின் பற்ற வேண்டியது அவ சியமென இலங்கை சட்டத் தரணிகள் சங்கத்தின் தலை வர் ஜனாதிபதி சட்டத்தரணி கௌஷல்ய நவரத்னவும் அண்மையில் தெரிவித்தி ருந்தமையும் குறிப்பிடத்தக் கது. (நி-5-6)



# போதைப்பொருள் கடத்தல் மூலம் வாங்கப்பட்ட வீடுகள் பறிமுதல்

(கொழும்பு)

போதைப்பொருள் கட த்தல் பணத்தில் பெறப்பட்ட தாக சந்தேகிக்கப்படும் 15 கோடி ரூபாய்க்கும் அதிக மான பெறுமதியான இர ண்டு வீடுகளை குற்றப் புல னாய்வு திணைக்களத்தின் சட்ட விரோத சொத்துக்கள் பிரிவு கையகப்படுத்தியு ள்ளது.

கிரிபத்கொட மற்றும் வத்தளை பிரதேசத்தில் உள்ள நாட்டின் முன் னணி போதைப்பொருள் வியா பாரிகளுக்கு சொந்தமா னது என கூறப்படும் இர ண்டு வீடுகளே இவ்வாறு கையகப்படுத்தப்பட்டுள ளன.

இதேவேளை, கடவ த்தை - கரகஹமுன பிர தேசத்தில் 10 கோடி ரூபா ய்க்கும் அதிக பெறுமதியில் கட்டப்பட்ட மூன்று மாடி சொகுசு வீடு ஒன்றும் பொலி ஸாரால் கையகப்படுத்த ப்பட்டுள்ளது.

வீட்டின், உரிமையாளர் தலைமறைவாகி உள் ளதாக பொலிஸார் தெரி வித்துள்ளனர். (நி-5-6)

# இராசிபலன்

15.03.2024
பங்குனி 02, வெள்ளிக்கிழமை
சஷ்டி பின்னிரவு 4.15 மணிவரை
கார்த்திகை முன்னிரவு 9.49 மணிவரை

சுபநேரம்-6.20-7.50 மணிவரை
இராகுகாலம்-10.50-12.20 மணிவரை
சஷ்டி விரதம்,கார்த்திகை விரதம்

சந்திராஷ்டமம்
உத்தரம்,அத்தம்.

வளவன்




பணத்தேவைகள் பூர்த் தியாகும் வாய்ப்பு ண்டு, யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், சுபநிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம்.




குடும்பத்தில் குதூ கலம் கூடும், வருமா னம் திருப்தி தரும் வகையில் அமையும், ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் செயற்படுவீர்கள், காரிய அனுகூல முண்டு.




கவலைகள் தீர சுந் தனை வழிபட வேண் டிய நாள், சில பிரச்சி னைகளை கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, மறதியால் ஒரு சில வேலைகளைச் செய்யாமல் விட்டுவிடுவீர்கள்.




நண்பர்களின் ஒத்து ழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு, புண் ணிய காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், ஏட் டிக்குப் போட்டியாகச் செயற்பட் டவர்கள் மனம் மாறுவர்.




உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுப வர்களை இனங்கண்டு கொள்வீர்கள், பணம் பற்றிய கவலை உருவாகி மறை யும், பெருமைகள் வந்து சேர கந் தனை வழிபட வேண்டிய நாள்.




குடும்பத்தில் சுபநிக ழ்வுகள் நடைபெறு வதற்கான வாய்ப் புண்டு, கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், வீடு கட்டும் பணியில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.




கௌரவமான சம்ப வங்கள் இடம்பெற லாம், புதிய பொரு ட்களை வாங்கும் எண் ணம் மேலோங்கும், வாய்ப்புகள் உங்களைத் தேடி வரலாம், நண்பர்கள் சந்திப்புண்டு.




தொலைபேசி வழி யில் கேட்கும் செய்தி களால் உற்சாகமடை வீர்கள், உறவினர் வழியில் எதிர்ப்புகள் கைகூடும், செய்தொழிலில் ஆர்வம் கூடும், போசன சுகமுண்டு.




எடுத்த காரியங்களை நிறைவேற்ற ஒரு முறைக்கு பல முறை அலைய நேரிடலாம், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், சயனசுகக் குறைவான நாள்.




எதிர்ப்பாக இருந்தவர் கள் மனம் மாறுவர், சுணங்கிய காரியங் களில் முன்னேற்றம் காணும் நாள், திடீக்கும் பயண ங்கள் இடம்பெறலாம், ஆன்றோர் சந்திப்புண்டு.




இனத்தார் பகை மாற எடுத்த முயற்சி கைகூ டும், போட்டிகளில் முன்னேற்றம் காணும் நாள், கடன்சுமை குறைய வழி வகை செய்வீர்கள், புகழ் மிக்க வர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.




பகை விலகி பாசம் கூடும், கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங் காகும், வழிபாட்டால் வளர்ச்சி கூடும், எடுத்த காரிய ங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.

ஏழு முறை விழுந்தாலும் எட்டாவது முறை எழு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்
## கொக்குவில் உப அலுவலக பழைய கட்டடம் இடித்தகற்றுவதற்கான கேள்வி அறிவித்தல்

நல்லூர் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கொக்குவில் கிழக்கு பகுதியில் அமைந்துள்ள கொக்குவில் உப அலுவலக பழைய கட்டடம் இடித்தகற்றுவதற்கான கேள்வி கோரப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் | : 2024.03.15 தொடக்கம் 2024.03.22 திகதி பி.ப 3.00 மணி வரை |
| கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் இறுதித்திகதி | : 2024.03.25 திகதி மு.ப 10.00 மணி வரை |
| கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி | : 2024.03.25 திகதி மு.ப 10.00மணிக்கு |
| கேள்விப்பத்திரம் திறக்கப்படும் இடம் | : கலந்துரையாடல் மண்டபம், தலைமை அலுவலகம், நல்லூர் பிரதேச சபை |

1. கேள்விப்பத்திரங்கள் இரண்டு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதியுட்பட இரு பிரதிகளையும் செயலாளர், நல்லூர் பிரதேச சபை, 14/5, கருவப்புலம் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில் என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு, தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு, பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடுதல் வேண்டும். காலந் தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும்.
2. மீளளிக்கப்படாத படிவக்கட்டணம் ரூபா. 1,000.00 மற்றும் மீளளிக்கப்படக்கூடிய வைப்புப்பணம் ரூபா. 25,000.00 என்பவற்றை செலுத்தி கேள்விப்பத்திரங்களை பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
3. உள்ளூராட்சி மன்றங்களினால் "தவறுனராக" கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்ட பின் அறியும் பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
4. எந்தவொரு கேள்வியையும் ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.
5. ஏற்றுக்கொள்ளக் கூடிய குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப்பணம் சபை நிதிக்கு மாற்றப்பட்டு கேள்விகாரரின் பெயர் "தவறுனர்" பட்டியலில் சேர்க்கப்படும்.
6. கேள்வி திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் கேள்விதாரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.
7. கேள்வி தொடர்பான மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
8. இடித்தகற்றப்படவுள்ள கட்டடத்தினை அலுவலக நாட்களில் மு.ப 08.30 மணி தொடக்கம் பி.ப 4.15 வரை பார்வையிட முடியும்.

| இல | வேலை விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித் தொகை (வற்வரி தவிர்ந்த) ரூபா. |
|---|---|---|---|---|
| 1 | கொக்குவில் உப அலுவலக பழைய கட்டடத்தினை நில மட்டத்துடன் இடித்தகற்றுதல். | 1,000.00 | 25,000.00 | 502,000.00 |

செயலாளர்,
நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்

(சி-8530) 2024.03.15

# சிகிச்சை நிலைய திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

தொல்புரம் ஆரம்ப மருத்துவப்பிரிவு மருத்துவமனை பாணவெட்டியில் புனரமைக்கப்பட்ட கர்ப்பவதிகள் சிகிச்சை நிலையம் நாளை சனிக்கிழமை மு.ப 10 மணிக்கு தொல்புரம் ஆரம்ப மருத்துவப் பிரிவு மண்டபத்தில் குறித்த மருத்துவ மனையின் ஆரம்ப மருத்துவ ப்பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி மருத்துவர் வி.குருபரன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் த.சத்திய மூர்த்தி, சிறப்பு விருந்தினர்களாக வட மாகாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ. கேதீஸ்வரன், சங்கானை வலிமேற்கு பிரதேச செயலர் திருமதி. கவிதா உதயகுமார் மற்றும் சுழிபுரம் வலிமேற்கு பிரதேச செயலர் ச.பாலரூபன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (நி-5-6)

# இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

யாழ். சண்டிலிப்பாய் ஆலங்குளாய் சனசமூக நிலைய அனுசரணையில். மறைந்த அமரர் சுரேந்திரன் சதீஷ்குமார் ஞாபகார்த்தமாக நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு சன சமூக நிலைய மண்டபத்தில் இரத்த தான முகாம் இடம்பெறவுள்ளது. (நி-5-6-110)

# சங்கிலியன் தோப்பில் மகளிர் தினம்

(யாழ்ப்பாணம்)

"பொருளாதாரத்தை கட்டியெழுப்ப பெண்களை வலுப்படுத்துவோம்" எனும் தொனிப் பொருளில் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு, யாழ். நல்லூர் சங்கிலியன் தோப்பில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட மேலதிக செயலாளர் (காணி) கே. ஸ்ரீமோகனன் கலந்து கொள் ளவுள்ளார். (நி-5-6)

# ஏலவிற்பனை

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை நீதிவான் நிதிமன்றின் வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்டதும் உரிமை கோரப்படாததுமான துவிச்சக்கர வண்டிகள், கோடரிகள், . சவள்கள் மற்றும் வாச்சிகள் என்பன எதிர் வரும் 2024.03.23 ஆம் திகதி காலை 10 மணிக்கு பருத்தித் துறை நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது என பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (நி-5-6)



யாழ்.இந்துக் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டியினை முன்னிட்டு இடம்பெற்ற இரண்டாவது ஈருருளி ஓட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. 30 கி.மீ தூரம் கொண்ட ஓட்டத்தில் மொத்தமாக 130 மாணவர்கள் பங்குபற்றியிருந்தனர்.

(படம்- சிவசாந்தன்)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | நெல்லியடி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 160 | 200 | 240 | 225 |
| உருளைக்கிழங்கு | 160 | 220 | 200 | 240 | 185 |
| பச்சைமிளகாய் | 300 | 300 | 350 | 350 | 320 |
| தக்காளி | 200 | 250 | 300 | 350 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 140 | 140 | 200 | 130 |
| கோவா | 350 | 300 | 380 | 450 | 300 |
| கரட் | 400 | 400 | 480 | 600 | 350 |
| பூசணி | 200 | 240 | 200 | 300 | 170 |
| புடோல் | 140 | 180 | 180 | 200 | 120 |
| வாழைக்காய் | 180 | 200 | 150 | 200 | 170 |
| சின்ன வெங்காயம் | 350 | 380 | 300 | 400 | 360 |
| பெரிய வெங்காயம் | 600 | 600 | 600 | 800 | 470 |
| பாகற்காய் | 400 | 300 | 500 | 600 | 380 |
| வெண்டைக்காய் | 250 | 200 | 200 | 400 | 130 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 120 | 200 | -- |
| பயற்றங்காய் | 250 | 250 | 200 | 400 | 250 |
| லீக்ஸ் | 350 | 300 | 350 | 400 | 250 |
| பீற்றூட் | 300 | 250 | 300 | 300 | 250 |
| கறிமிளகாய் | 400 | 300 | 400 | 400 | 350 |
| முருங்கைக்காய் | 1000 | 800 | 1000 | 1200 | 900 |
| போஞ்சி | 300 | 250 | 450 | 500 | -- |
| கத்தரிதம்புள்ள | 150 | 100 | 200 | 200 | -- |
| கீரை - 1 பிடி | 100 | 120 | 70 | 100 | 40 |
| தேசிக்காய் | 160 | 200 | 150 | 250 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 120 | 80 | 80-120 | 50-100 |
| இராசவள்ளி | 350 | 400 | 500 | 400 | -- |
| வெங்காயப்பூ | 160 | 200 | 200 | 250 | 120 |
| முள்ளங்கி | 80 | 100 | 120 | 200 | 180 |
| பொன்னாங்காணி | 80 | 100 | 100 | 60 | 100 |
| வல்லாரை | 60 | 40 | 80 | 80 | 100 |
| [illegible] | 100 | -- | 80 | -- | 80 |

# மாநகரசபையின் நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபையின் வரியிறுப்பாளர் களின் நன்மை கருதி, நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை நடமாடும் சேவை காங்கேசன் துறை வீதி, தட்டாதெரு சந்தியில் அமைந்துள்ள கலாஜோதி சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

வட்டாரம் 01,02,08 மற்றும் 09 ஆம் வட்டாரங்களிற்கான ஆதனவரி அறிவித்தல்கள் விநியோகித்தல், பெயர்மாற்ற விண்ணப்ப படிவம் வழங்கல், துவிச்சக்கர வண்டி உரிமம் வழங்கல் போன்ற சேவைகளைப் பெற்றுக்கொள்வதுடன் அனைத்து வட்டாரங்களினதும் இது வரை காலமும் செலுத்த வேண்டியுள்ள ஆதனவரி நிலுவைகள் மற்றும் நடப் பாண்டு ஆதனவரி, தண்ணீர்க் கட்டணம் மற்றும் வியாபார வரி போன்றவற்றை செலுத்திக் கொள்ளுமாறு யாழ். மாநகர சபை ஆணையாளர் அறிவித்துள்ளார். (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.எம்.எப் இன் ஆதரவின்றி யாராலும் ஆட்சி நடத்த முடியாது

## அமைச்சர் பந்துல சுட்டிக்காட்டு



(கொழும்பு)

ஐ.எம்.எப். உடன்படிக்கையின் தவறான புரிதலின் காரணமாக எதிர்க்கட்சிகளால் நாட்டை ஆள முடியாது என்பது நிரூபணமாகியுள்ளதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

இவ்வருடம் நடைபெறவுள்ள கொழும்பு சர்வதேச திரைப்பட விழாவை ஏற்பாடு செய்வது தொடர்பில் ஊடக அமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

ஆனால் கலாநிதி ஹர்ஷ டி சில்வா, பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் போன்ற கல்விமான்கள் எதிர்கட்சித் தலைவருக்கு உண்மைகளை புரிய வைப்பதற்காக கடுமையாக போராடி வருவதாகவும் ஆனால் நல்ல பதில் கிடைக்கவில்லை எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச நாணய நிதியம் உள்ளிட்ட சர்வதேச அமைப்புகளின் ஆதரவின்றி யார் ஆட்சியைக் கைப்பற்றினாலும் நாட்டில் பத்தில் ஒரு பங்கை கூட தொடர முடியாது என்பது எதிர்க்கட்சித் தலைவர் இந்த தருணத்தில் புரிந்து கொள்ள வேண்டிய நிலைமை என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

மேலும், அரசாங்கம் கையொப்பமிட்ட ஒப்பந்தங்கள் இல்லாமல் எதிர்காலத்தில் யார் அரசாங்கத்தை அமைத்தாலும் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் உள்ளிட்ட பிற அமைப்புகளின் ஆதரவின்றி எவராலும் அரசாங்கத்தை நடத்த முடியாது.

இந்த விடயங்களை ஆழமாக ஆராயாத ஒருவரால் நாட்டில் அரசாங்கத்தை நடத்த முடியாது, நாட்டை கட்டியெழுப்ப முடியாது, நாட்டின் பிரச்சினைகளை அடையாளம் காண முடியாது எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.(நி-5-6)

## சர்வதேச நாணய நிதியத்தின் 33 வீத உறுதிமொழியை நிறைவேற்ற தவறிய இலங்கை

### வெரிட்டே ஆய்வு நிறுவனம் தெரிவிப்பு

International Monetary Fund (IMF)

(கொழும்பு)

பெப்ரவரி மாத இறுதிக் குள் நிறைவேற்றப்பட வேண்டிய சர்வதேச நாணய நிதியத்தின் உறு தி மொழிகளில் 33 வீதத்தை இலங்கை நிறைவேற்றத் தவறியுள்ளதாக வெரிட்டே ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான சர்வ தேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட கடன் வசதியின் இரண்டாவது தவணைக்கான நிதி கடந்த டிசெம்பர் மாதம் வழங்கப்பட்டது.

இந்நிலையில், புதுப்பிக்கப்பட்ட ஒப்பந்தத்தின் கீழ், இலங்கை பெப்ரவரி மாத இறுதிக்குள் 45 உறுதி மொழிகளை நிறைவேற்ற வேண்டும்.

எனினும், 14 உறுதிமொழிகள் மட்டுமே நிறை வேற்றப்பட்டுள்ளதாகவும், 15 உறுதிமொழிகள் நிறை வேற்றப்படவில்லை என வும் வெரிட்டே ரிசர்ச் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இது இலங்கை 33 வீத உறுதி மொழியை நிறை வேற்றத் தவறியுள்ள மையை காண்பிப்பதாகவும் குறித்த நிறுவனம் தெரி வித்துள்ளது. (நி-5-6)

## வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம் ஆதனப் பெயர்மாற்றம்

### 22/08, சாத்தனாவத்தை வீதி, வட்டாரம்-04

வலிகாமம் மேற்கு பிரதேச சபை சங்கானை உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 04, சாத்தனாவத்தை வீதியிலுள்ள இல 22/08 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப்பதிவேட்டின் பிரகாரம் K.சுப்பையா என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய ஆதனத்தினை வேலுப்பிள்ளை ஐயாத்துரையும் பெண் இராசேஸ்வரியும் ஆகியவர்கள் குறித்த ஆதனம் யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்ற P294ம் இலக்க வழக்கின் மூலம் மகாதேவ பிள்ளையார் கோவிலின் நலனுக்காக நம்பிக்கைச்சொத்தாக வைத்திருக்கப்பட்டிருந்தபோதிலும் குறித்த ஆதனத்தில் வருமானக்குறைவின் காரணமாக குறித்த ஆதனத்திற்கு பதிலாக வேறோர் ஆதனத்தினை நம்பிக்கைச் சொத்தாக வைத்திருப்பதாகவும் குறித்த ஆதனத்தினை நம்பிக்கைச்சொத்திலிருந்து விலக்குவதாகவும் குறிப்பிட்டு பிரசித்த நொத்தாரிசு மு.க. சுப்பிரமணியம் முகதாவில் 11812/26.08.1978 ஆம் இலக்கத்தில் நம்பிக்கைபிரகடன உறுதியொன்றை நிறைவேற்றியிருந்தார்கள்.

கணபதி பிள்ளையினார் பிரசித்த நொத்தாரிசு மு.க.சுப்பிரமணியம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 11819/30.08.1978 ம் இலக்க உறுதியால் குறித்த வேலுப்பிள்ளை ஐயாத்துரையும் பெண் இராசேஸ்வரியும் ஆகியவர்களிடமிருந்து குறித்த ஆதனத்தில் ஓர் பகுதியினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

வேலுப்பிள்ளை செல்வரத்தினம் பெண் வசந்தமாலா பிரசித்த நொத்தாரிசு ப.இராசகுரு முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1124/29.11.1986 ம் இலக்க உறுதியால் குறித்த கணபதி பிள்ளையினாரும் பெண் மகேஸ்வரியும் ஆகியவர்களிடமிருந்து குறித்த ஆதனத்தில் ஓர் பகுதியினை சீதனமாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

மாரிமுத்து மகேந்திரமும் பெண் ராதாதேவியும் பிரசித்த நொத்தாரிசு இ.சபேசன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 9010/17.02.2021 ம் இலக்க உறுதியால் குறித்த வேலுப்பிள்ளை செல்வரத்தினமும் பெண் வசந்தமாலாவும் ஆகியவர்களிடமிருந்து குறித்த ஆதனத்தை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள். குறித்த மாரிமுத்து மகேந்திரமும் பெண் ராதாதேவியும் ஆகியவர்கள் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்கள்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபணை தெரிவிப்பர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது மாரிமுத்து மகேந்திரமும் பெண் ராதாதேவியும் ஆகியவர்களுக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

செயலாளர்,
வலிகாமம் மேற்கு பிரதேசசபை.

(068)


## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 36<br>உயரம்: 170cm<br>தகைமை/தொழில்: B.SC IT(Hons), Software, Engineer<br>எதிர்பார்ப்பு: படித்த வேலை பார்க்கிற பெண்<br>தொ.இ: B/14133 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: பரணி கி.பா: 29 3/4<br>உயரம் : 158 cm<br>தகைமை/தொழில்: O/L தையம், ஆரிவேக்<br>எதிர்பார்ப்பு: பிரான்ஸ், சுவிஸ்<br>தொ.இ: G/14307 |
| பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 31 1/2<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: Bsc Senier Software Engineering, Software Engineer (Singapore)<br>எதிர்பார்ப்பு: A/L, Degree<br>தொ.இ: B/14135 | பிறப்பு: 1998 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் கி.பா: 22<br>உயரம் : 152 cm<br>தகைமை/தொழில்: A/L கணிதம், BIT (Reading), முகமைத்துவ உதவியாளர்.<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி<br>தொ.இ: G/14310 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம் : சுவாதி<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: B.com (Final)<br>எதிர்பார்ப்பு : அரச தொழில்<br>தொ.இ: B/14140 | பிறப்பு : 1992 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: விஞ்ஞானப்பட்டதாரி (BSC), ஆசிரியை<br>எதிர்பார்ப்பு: படித்த பட்டதாரி/அரச தொழில் /படித்த வெளிநாட்டு நிரந்தர வாசி.<br>தொ.இ: G/14319 |
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம் : அவிட்டம்<br>உயரம்: 5'4"<br>தகைமை/ தொழில்: NDT (Chemical Engineer), Asst Manager<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம், வங்கி, ஆசிரியை<br>தொ.இ: B/14142 | பிறப்பு: 2000 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி<br>கி.பா: சூரி செவ் 8 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: BSC Chemistry (Hons), Final Year<br>எதிர்பார்ப்பு : பொறியியலாளர், விரிவுரையாளர், டொக்டர், வங்கி முகாமையாளர், நில அளவையாளர்.<br>தொ.இ: G/14327 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம்

# காசாவில் பெற்றோராக இருப்ப
# பெரும் சாபம் - ஐ.நா பிரதிநி

(நியூயோர்க்)

**கடந்த 4 ஆண்டுகளில் உலகம் முழுவதும் நடந்த போர்கள், மோதல்களால் ஏற்பட்ட குழந்தைகள் உயிரிழப்பைவிட காசாவில் பலியான குழந்தைகளின் எண்ணிக்கை அதிகம் என்றும் காசாவில் பெற்றோராக இருப்பது ஒரு பெரும் சாபம் என்று பாலஸ்தீனத் துக்கான ஐ.நா.வின் அகதிகள் மறுவாழ்வு மைய பிரதிநிதி தெரிவித்துள்ளார்.**



இது தொடர்பாக எக்ஸ் தளத்தில் பிலிப் லாஸரினி என்ற ஐ.நா. பிரதிநிதி பகிர்ந்த பதிவில், "காசாவில் கடந்த 4 மாதங்களில் உயிரிழந்த குழந்தைகளின் எண்ணிக்கை உலகம் முழுவதும் கடந்த 4 ஆண்டுகளாக நடந்த பல்வேறு மோதல்களில் உயிரிழந்த ஒட்டுமொத்த குழந்தைகளின் எண்ணிக்கையைவிட அதிகம். கடந்த 2019 முதல் 2022ஆம் ஆண்டு வரை உலகம் முழுவதும் நடந்த பல்வேறு மோதல்களில் 12,193 குழந்தைகள் இறந்தனர். ஆனால், காசாவில் கடந்த 4 மாதங்களில் மட்டும் 12,300 இற்கும் அதிகமான குழந்தைகள் இறந்துள்ளனர்.

இந்தப் போர் குழந்தைகளின் மீதான போர். அவர்களின் எதிர்காலத்தின் மீதான போர். இந்தப் போர் தொடங்கி 3 வாரங்களிலேயே 3600 பாலஸ்தீனிய குழந்தைகள் கொல்லப்பட்டுவிட்டனர்.

"காசாவில் பெற்றோராக இருப்பது ஒரு பெரும் சாபம்" என்று வேதனையுடன் குறிப்பிட்டுள்ளார்.

காசாவில் இதுவரை 31184 பாலஸ்தீனர்கள் உயிரிழந்துள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் பெண்கள், குழந்தைகள் என அப்பகுதி சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

முன்னதாக கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேல் மீ
படையினர் தி
நடத்தினர். 
இஸ்ரேலியர்
ழுந்தனர்.

250 இற்கு
இஸ்ரேலியர்க
டவர் கடத்திக்
டனர். இந்நி
பேர் விடுதன
32 பேர் இற
என அஞ்சப்ப
சியவர்களை
தொடர்ந்து இ
குரல் கொடுத்
றனர். இருப்
ரேல் தாக்குத
வில்லை.

காசாவில் ர
போர், பசி,
மத்தியில் தெ
ளது. ரமழன்
கூட போரின்
யும், கொடூ
வில்லை.
ரமழன்களின்
எங்களை அ
கின்றன எ
வாசிகள் தா
கத்தைத் தெ
னர்.

## பணயக் கைதிகளாக கடத்தியோரை விடுவிக்க பலகோடி பணம் கேட்டு மிரட்டல்

### நைஜீரியாவில் அவலம்

(நைஜீரியா)

வடக்கு நைஜீரியாவில் பள்ளி மாணவர்களை கடத்திய கும்பல் அவர்களை பாதுகாப்பாக விடுவிக்க $620,000 பணம் கேட்டு கோரிக்கையை முன் வைத்துள்ளனர்.

மார்ச் 7 ஆம் திகதி வடக்கு நைஜீரியாவின் கடுனா மாநிலத்தின் குறிகா நகரில், ஆயுத கும்பல் ஒன்று திடீர் தாக்குதல் நடத்தி 8 முதல் 15 வயதுக்குட்பட்ட பள்ளிக் குழந்தைகள் மற்றும் ஆசிரியர்கள் என 280 பேர் பணயக் கைதிகளாக கடத்தி சென்றனர்.

இந்த பெரும் கடத்தல், 2021 ஆம் ஆண்டுக்குப் பிறகு நைஜீரியாவில் நடந்த முதல் பெரிய அளவிலான பள்ளி மாணவர்கள் கடத்தல் சம்பவமாகும்.

இந்நிலையில் கடத்தப்பட்டோரின் குடும்பங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் சமூகத் தலைவர் ஜுப்ரில் அமினுக்கு கடந்த செவ்வாய்க்கிழமை பணய கோரிக்கையுடன் தனக்கு தொலைபேசி அழைப்பு ஒன்று வந்ததாக தெரிவித்துள்ளார்.

அதில், பள்ளி மாணவர்கள் மற்றும் பள்ளி ஊழியர்கள் அனைவரையும் பாதுகாப்பாக விடுவிப்பதற்கு மொத்தமாக 1 பில்லியன் நைரா ($620,000) பணம் வேண்டும் என கேட்டார்கள் என்று அமினு தெரிவித்துள்ளார். அத்துடன் கடத்தப்பட்ட திகதியில் இருந்து 20 நாட்களுக்கு பணய தொகை செலுத்தப்படாவிட்டால் அனைவரையும் கொலை செய்து விடுவோம் என ஆயுத கும்பல் மிரட்டியதாகவும் தெரிவித்துள்ளார்.

கடத்தல்காரர்களின் நோக்கம் இன்னும் தெளிவாக இல்லை, ஆனால் பள்ளி மாணவர்களை இலக்காகக்கொண்டு பணம்கேட்டு கடத்தல் செய்வது நைஜீரியாவின் சில பகுதிகளில் தொடர்ந்து வரும் பிரச்சினையாக உள்ளது எனத் தெரிவித்துள்ளனர். (நி.ஃ)

## 272 கிலோ இயந்திர நுரையீரலு
## வாழ்ந்து வந்த நபர் உயிர



(வோஷிங்டன்)

அமெரிக்காவில் 272 கிலோ இயந்திர நுரையீர லுக்குள் 70 ஆண்டுகள் வாழ்ந்த நபரொருவர் கடந்த செவ்வாய்க்கிழமை உயிரிழந்திருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

அமெரிக்காவில் 1952 ஆம் ஆண்டு பால் அலெக் சாண்டர் என்பவர் தனது 6 ஆவது வயதில் போலியோவால் பாதிக்கப்பட்டார். அதனால் அவரது கழுத்துக்கு கீழ் உ
செயல் இழந்து மு

இதனையடு
முடியாமல் அ
டெக்சாஸில் உ
வமனைக்கு 
லப்பட்டார். அ
அவசர மூச்சுக்கு
சிகிச்சை செய்யப்

அதன் பின்
கிராம் எடையு
நுரையீரலின்
அவர் உயிர் பி
வாழ்நாள் மு
உலோகக் கட்
வாழ வேண்
ஏற்பட்டது. இந்
அவர் கடந்த செ
உயிரிழந்துள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ...ப்பது ...திநிதி

இஸ்ரேல் மீது ஹமாஸ் படையினர் திடீர் தாக்குதல் நடத்தினர். இதில் 1,160 இஸ்ரேலியர்கள் உயிரிழந்தனர்.

250 இற்கும் மேற்பட்ட இஸ்ரேலியர்கள், வெளிநாட்டவர் கடத்திச் செல்லப்பட்டனர். இந்நிலையில் 120 பேர் விடுதலையாகினர். 32 பேர் இறந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது. எஞ்சியவர்களை மீட்க தொடர்ந்து இஸ்ரேலியர்கள் குரல் கொடுத்து வருகின்றனர். இருப்பினும் இஸ்ரேல் தாக்குதலை நிறுத்தவில்லை.

காசாவில் ரமழன் மாதம் போர், பசி, பஞ்சத்துக்கு மத்தியில் தொடங்கியுள்ளது. ரமழன் தொடங்கியும் கூட போரின் வன்முறையும், கொடூரமும் நிற்கவில்லை. கடந்த ரமழன்களின் நினைவுகள் எங்களை அரவணைக்கின்றன என்று காசா வாசிகள் தங்கள் ஆதங்கத்தைத் தெரிவித்துள்ளனர். (நி-5-6)

# ...ரையீரலுடன் உயிரழப்பு

கழுத்துக்கு கீழ் உள்ள பாகங்கள் செயல் இழந்து முடங்கினார்.

இதனையடுத்து சுவாசிக்க முடியாமல் அவர் சிரமப்பட, டெக்சாஸில் உள்ள மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். அங்கு அவருக்கு அவசர மூச்சுக்குழாய் அறுவை சிகிச்சை செய்யப்பட்டது.

அதன் பின்னர் 272 கிலோ கிராம் எடையுள்ள இயந்திர நுரையீரலின் உதவியுடன் அவர் உயிர் பிழைத்தார். பின்பு வாழ்நாள் முழுவதும் அந்த உலோகக் கட்டமைப் பிற்குள் வாழ வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்நிலையிலேயே அவர் கடந்த செவ்வாய்க்கிழமை உயிரிழந்துள்ளார். (நி-5-6)

# ஒலிம்பிக் போட்டிகளை முன்னிட்டு பிரான்ஸ் நாணயங்கள் வெளியீடு

(பாரிஸ்)

ஒலிம்பிக் போட்டிகளை முன்னிட்டு பிரான்ஸ் புதிய நாணயங்களை வெளியிட்டுள்ளது.

ஒலிம்பிக் போட்டிகள் வருகின்ற கோடை காலத்தில் பாரிஸ் நகரம், பிரான்ஸ் நாட்டிற்கு மட்டும் தலை நகரமாக இல்லாமல் ஒட்டு மொத்த உலகிற்கும் தலை நகராக மாறவுள்ளது.

அதாவது, 33 ஆவது கோடைக்கால ஒலிம்பிக் போட்டிகள் தொடரை பாரிஸ் நகரம் தொகுத்து வழங்கவுள்ளது.



பிரான்ஸில் நடைபெறும் இந்த ஒலிம்பிக் போட்டிகளை முன்னிட்டு

கிட்டத்தட்ட 15 மில்லியன் மக்கள் உலகம் முழுவதிலும் இருந்து பாரிஸ் நகருக்கு வரலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் வரவிருக்கும் ஒலிம்பிக் போட்டிகளை வரவேற்கும் விதமாக பிரான்ஸ் புதிய நாணயங்களை வெளியிட்டுள்ளது.

இதற்கு முன்னதாகவும் ஐரோப்பாவின் பல்வேறு உறுப்பு நாடுகள் இது போன்று சிறப்பு விளையாட்டு-கருப்பொருள் யூரோ நாணயங்களை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# இந்தோனேசியா வெள்ளத்தால் அதிகரிக்கும் உயிரிழப்புகள்

(ஜகார்த்தா)

இந்தோனேசிய தீவில் கனமழை வெள்ளம் மற்றும் நிலச்சரிவில் பலியானவர்களின் எண்ணிக்கை 32 ஆக உயர்ந்துள்ளது.

மேற்கு சுமத்ரா மாகாணத்தில் பெய்த கனமழையால் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. இதனால் ஆங்காங்கே நிலச்சரிவு ஏற்பட்டதில் பலர் உயிரிழந்தனர்.

வெள்ளத்தால் கடுமையாக பாதிக்கப்பட்ட 70,000 இற்கும் அதிகமான மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு தஞ்சமடைந்தனர்.

இதற்கிடையில் காணாமல் போன பலரை தேடும் பணி ஒருபுறம் நடைபெற்று வருகிறது.

வெள்ளம் மற்றும் நிலச்சரிவில் சிக்கி 19 பேர் பலியானதாக முன்னர் தகவல் வெளியான நிலையில், தற்போது பலி எண்ணிக்கை 32 ஆக உயர்ந்துள்ளதாக தேசிய பேரிடர் தணிப்பு கழகம் தெரிவித்துள்ளது. (நி-5-6)

# நாட்டுக்காக தனது சம்பளத்தை தியாகம் செய்த பாக். ஜனாதிபதி

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தான் கடந்த சில நாட்களாக கடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவித்து வருகிற நிலையில் அந்நாட்டு ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி தனது பதவிக்காலத்தில் சம்பளம் வாங்குவதில்லை என முடிவு செய்துள்ளார்.

"ஜனாதிபதி சர்தாரி தனது பதவிக்காலத்தில் நாட்டுக்கு உதவுவதற்காக சம்பளம் எதுவும் வாங்க மாட்டார்.

தனது சம்பளம் நிதி முகாமைத்துவம் மற்றும் தேசிய வருமானத் திற்கு சுமையாக இருக்கக் கூடாது என்ற நோக்கத்தில் ஜனாதிபதி இந்த தீர்மானத்தை எடுத்துள்ளார்.

என பாகிஸ்தான் ஜனாதிபதி அலுவலகம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் மொஹ்சின் நக்வியும் இதே முடிவை எடுத்துள்ளார். அவரும் இம்முறை தனது பதவிக்காலத்தில் சம்பளம் வாங்குவதில்லை என முடிவெடுத்திருப்பதாக தெரிவித்துள்ளார். (நி-5-6)

# 2025 ஆம் ஆண்டிற்குள் 10 மில்லியன் ஹியூமனாய்ட் ரோபோக்கள்

## சீனாவின் எதிர்கால திட்டம்

(பீஜிங்)

2025இற்குள் ஹியூமனாய்ட் ரோபோக்களை பெருவாரியாக உற்பத்தி செய்ய சீனா திட்டமிட்டுள்ளது.

மனித வடிவ ரோபோட் துறையில் முன்னோடியாக இருப்பதற்கான திட்டவட்டமான திட்டத்தை சீனா அறிவித்துள்ளது.

அந்த வகையில், தொழில் துறை மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் (MIIT) 2025 ஆம் ஆண்டுக்குள் ஹியூமனாய்ட் ரோபோக்கள் உருவாக்கம் மற்றும்



பெருமளவு உற்பத்தி செய்வதற்கான செயல் திட்டத்தை வெளியிட்டுள்ளது. இரண்டு ஆண்டுகளில் நாட்டில் 10,000 ஊழியர்களுக்கு 500 மனித வடிவிலான ரோபோக்கள் இருக்க வேண்டும், அதாவது 10 மில்லியன் ரோபோக்கள் உற்பத்தி செய்ய வேண்டும் என்ற இலக்கு வைக்கப்பட்டுள்ளது.


சீன அமைச்சகத்தின் திட்டம் ஸ்மார்ட்போன்கள் போலவே, ஹியூமனாய்ட் ரோபோக்களும் தொழில் துறைகளையும் நம் வாழ்க்கை முறையையும் புரட்சிகரமாக மாற்றும் என்று MIIT கணித்துள்ளது.

மேலும், 2025 ஆம் ஆண்டுக்குள் இந்த ரோபோக்கள் "முன்னேறிய நிலையை" அடைய வேண்டும் என்று இலக்கு வைக்கப்பட்டுள்ளது.

இந்த ரோபோட் தொழில் நுட்பத்தின் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் உற்பத்தித் துறையையும், மனித வாழ்க்கையையும் முற்றிலும் மாற்றும் என்று சீனாவின் அமைச்சகம் கூறுகிறது.

2027 ஆம் ஆண்டுக்குள் குறிப்பாக ஹியூமனாய்ட் ரோபோட் உற்பத்திக்கான வலுவான விநியோக சங்கிலியை செய்யவும், சீனாவின் பொருளாதாரத்தில் மனித உருவங்கள் கொண்ட ரோபோக்களின் பங்கு முக்கியமானதாக இருக்க வேண்டும் என்றும் சீன அமைச்சகம் நோக்கம் கொண்டுள்ளது. (நி-5-6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



நல்லூரான் பாணன்குளம் நாச்சியம்மன் ஆலய வருடாந்த மகோற்சவ பெருவிழா கொடியேற்றத்துடன் நேற்று முன்தினம் பக்தி பூர்வமாக இடம் பெற்றது.

படங்கள்-சிவசாந்தன்

# தமிழினத்தை ஒழிக்க பல திட்டங்கள் முன்னெடுப்பு

## செல்வம்.எம்.பி

(மன்னார்)

சிங்கள தேசத்தில் தமிழ் மக்கள் பூர்வீகமாக வாழ்ந்தார்கள் என்பதை இல்லாது ஒழிப்பதற்காக பல்வேறு செயல் திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதாக பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் நேற்று வியாழக்கிழமை இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கை அரசாங்கம், அதனுடன் சேர்ந்த திணைக்களங்கள் மற்றும் புத்த பிக்குகள் மிகவும் மோசமாக வன்முறையை உருவாக்குவதற்காகவும் எமது இனத்தை இல்லாது ஒழிப்பதற்குமான செயற்பாட்டை செய்து வருகின்றனர். இந்த நிலையிலே, தற்போது உச்ச கட்டமாக சிவராத்திரி அன்று வெடுக்குநாறி மலை ஆதி சிவன் ஆலயத்தில் வழி பாட்டிற்காக சென்ற எம் உறவுகள் கைது செய்யப்பட்டுள்ள சம்பவம் கண்டிக்கத்தக்கது என அவர் மேலும் தெரிவித்தார். (நி-5-6-285)

# விடுவிக்கப்பட்ட பகுதிகளில் திருடர்கள் கைவரிசை

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலி வடக்கு பிரதேசங்களில் அண்மையில் விடுவிக்கப்பட்ட பகுதிகளுக்குள் திருடர்கள் புகுந்து பெறுமதியான மரங்களை வெட்டி எடுத்து செல்வதுடன், வீட்டில் காணப்படும் பெறுமதியான பொருட்களையும் களவாடி சென்றுள்ளதாக காணி உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

விடுவிக்கப்பட்ட பகுதிகளுக்குள் காணப்படும் காணிகள் வீடுகளில் யாரும் இல்லாத நிலைமையை பயன்படுத்தி, திருடர்கள் அப்பகுதிகளுக்குள் புகுந்து, பயன்தரு மரங் களை வெட்டுவதுடன் , வீட்டில் காணப்படும் ஜன்னல் , கதவுகளின் நிலைகள் , இரும்புக் கம்பிகள் உள்ளிட்டவையே களவுபோயுள்ளது. (நி-5-6-33)

# சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை

## விவாதத்திற்கு நாள் குறிப்பு



(கொழும்பு)

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு எதிராக எதிர்க்கட்சிகளால் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதம் எதிர்வரும் 19 மற்றும் 20 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது.

அத்துடன், குறித்த பிரேரணை மீதான வாக்கெடுப்பு எதிர்வரும் 20 ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு இடம்பெறவுள்ளதாகவும் பாராளுமன்ற விவகாரங்களுக்கான குழு அறிவித்துள்ளது.

இவ்வாறானதொரு நிலையில் சபாநாயகருக்கு எதிராக கொண்டுவரப்பட்டுள்ள அவ நம்பிக்கை பிரேரணைக்கு தாம் ஆதரவு வழங்கவுள்ளதாக தமிழ் தேசிய மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது.

சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஐக்கிய மக்கள் சக்தி உட்பட பல எதிர்க் கட்சிகள் ஆதரவளிக்க தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# வெள்ளை ஈ தாக்கத்தை கட்டுப்படுத்த ஒட்டுண்ணி

(தருமபுரம்)

தென்னைகளில் தற்போது பரவிவரும் வெள்ளை ஈயைக் கட்டுப்படுத்த விவசாயத் திணைக்களத்தால் "என் காசியா ஹோாடிலொப்பே" எனும் ஒட்டுண்ணி திருவையாறு, திருநகர்,கிளிநொச்சி நகர், ஆனந்தபுரம் ஆகிய பகுதிகளில் விடப்பட்டுள்ளது.

விவசாயத் திணைக்களத்தின் பயிர் பாதுகாப்புச் சேவையின் உதவிப் பணிப்பாளர் பிரபாத் நிஷாந்த தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் திருநெல்வேலி விவசாயத் திணைக்களத்தின் ஆராய்ச்சி உதவிப் பணிப்பாளர் எஸ்.இராஜேஸ்கண்ணா, கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் சூ.ஜெகதீஸ்வரி மற்றும் பாடவிதான உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டனர். (நி-5-6-316)

# இன்று ஒரு தகவல் 65



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## பூமிக்கு வெளிச்சம்

இரவைப் பகலாக்க முடியுமா? இது ஒருத்தரோட கேள்வி. ஏன் முடியாது? என்னாலே முடியுமே! இது இன்னொருத்தரோட பதில். எப்படி முடியும்? என்று கேட்டார் அவர். ஒரு விளக்கை கொளுத்தி வைத்தால் சரியாக போய்விடும் என்றார் இவர். பதில் சொன்னவரை கோவிக்கிறதாலே பிரயோசனமே இல்லை! இவரிடம் போய் இந்த கேள்வியை அவர் கேட்டார் பாருங்க... அவரைச் சொல்லணும்.

இந்த கேள்விக்கு ஒரு விஞ்ஞானி பதில் சொல்கிறார். Mr. Christian Marchal என்று ஒரு French விஞ்ஞானி. இரவை பகலாக்க முடியும் என்று சொல்கிறார் அவர் எப்படித் தெரியுமா? சந்திரன் இருக்குதல்லவா அங்கே சென்று கண்ணாடியை பதிக்க வேண்டுமாம். சூரிய வெளிச்சம் அந்த கண்ணாடியில் பட்டு பிரதி பலிக்குமாம். அந்த வெளிச்சம் பூமிக்கு வந்து சேருமாம். இங்கே இரவு பகலாயிடுமாம் ஆச்சரியமாகவே இருக்கிறது.

உரோம்லே 32 ஆவது International Space Travel Congress நடந்தது. அதில் கலந்து கொண்டார் இந்த விஞ்ஞானி அப்போது தான் இதைச் சொன்னார். சரி இதனால் நமக்கு என்ன சௌகரியம்? இது தானே உங்கள் கேள்வி? அப்படிக்கேளுங்கள் சொல்லுகிறேன்! பூமியிலே தெரு விளக்குகள் தேவையில்லாமல் போய்விடும். இதற்கு ஆகிற செலவும் மிச்சம் – மின்சாரமும் மிச்சம். இப்பவும் பல இடங்களிலே தெரு இருக்கும் விளக்கும் இருக்கும் ஆனால் வெளிச்சம் இருப்பதில்லை.

சந்திரனிலே கண்ணாடியை பதித்து அங்கேயிருந்து இங்கே கொண்டு வரும் வெளிச்சம் கொஞ்சமாகத்தான் இருக்கும் என்று நினைத்துவிடாதீர்கள்.நாம் நல்லா துல்லியமா பார்த்து படிக்கிற அளவுக்கு வெளிச்சத்தைக் கொண்டுவரமுடியுமாம்.

இன்னொரு சந்தேகம். பூமிக்கு வெளிச்சம் கொண்டு வருவது என்றால் நிலாவிலே பதிக்கிறதுக்கு எவ்வளவு கண்ணாடி தேவைப் படும். அவ்வளவு கண்ணாடிக்கு எங்கே போவது? இப்படி நினைக் கிறது தப்பு. ஏன் தெரியுமா? சந்திரனில் ஒரு சதுர மீற்றர் அளவுள்ள கண்ணாடியை வைத்தால் பூமிக்கும் ஒரு சதுர மீற்றர் அளவுக்குத் தான் வெளிச்சம் வரும் என்று நினைக்கிறீங்களா? அப்படி இல்லை. சந்திரனிலே ஒரு சதுர மீற்றர் அளவுள்ள கண்ணாடியை வைத்தால் அது பூமிக்கு வந்து சேரும் போது 3200 இல் இருந்து 3800 சதுர மீற்றர் அளவுக்கு வெளிச்சம் கொடுக்கும். சும்மா சொல்லக்கூடாது. வருங்காலத்திலே இது நடைமுறைக்கு வந்தாலும் வந்துவிடும்.

இயற்கையாகவே இரவு நேரம் குறைவாக இருந்தால் இப்படி ஒரு முயற்சி அவசியமாக இருக்காது. வருடத்திற்கு 365 பகல் 365 இரவு இருக்கு. பகல் பாதி இரவு பாதி என்று இருக்கிறதை விட பகல் கால் பங்கு இரவு முக்கால் பங்கு என்று இருந்தால் ஒரு விதத்தில் சௌகரியம். நிறைய நேரம் தூங்கலாம்! அது இருக்கட்டும்... வருடத்திற்கு இப்போது 365 நாள் என்று சொல்கிறோம். ஒரு 360 மில்லியன் வருடத்திற்கு முன்னாடி நாம் இங்கே இருந்தால் இப்படி சொல்லமாட்டோம். அப்போது எல்லாம் வருடத்திற்கு 480 நாள் அப்படி இருந்தது. இப்போது ஏன் 365 இற்கு வந்துவிட்டது. அதற்கு காரணம் இருக்கிறது.

பூமி தன்னைத்தானே சுத்திக் கொண்டு இருக்கிறது என்பது நமக்கு தெரியும்! அப்படி சுத்திக்கொண்டிருக்கிற வேகம் வர வர குறைந்து கொண்டே வரும். அப்படி வரும் போது வருடத்திற்கு நாள் கணக்கும் குறைந்து கொண்டே வந்துவிடும். இன்னும் பல மில்லியன் வருடத்திற்கு பிறகு அது இன்னமும் குறையலாம். 365 நாள் என்கிறது மாறி 360 நாள் என்று ஆகலாம். இதனை சோவியத் விஞ்ஞானிகள் சொல்லுகிறார்கள். பூமி சுற்றுகின்ற வேகம் அவ்வளவு சீக்கிரத்திலே குறைந்து போகாது. அதுக்கு மிகவும் காலம் ஆகும். இப்படி இவ்வளவு வேகமாக சுற்றிக்கொண்டு இருக்கும் போது நாம் என்னென்னத்தையோ அனுப்பி இந்த பூமியை சுற்றிக்கிட்டு இருக்கிறது போல செய்து நாமும் கன்னா பின்னா என்று சுற்றிக் கொண்டு இருப்போம். சரி அது இருக்கட்டும்.

பூமியை வெளிச்சம் போட்டு காட்ட வேண்டும் என்றால் நிலாவிலே கண்ணாடியைப் பதிக்கணும் என்று தெரிந்து கொண்டோம். நிலாவிலே கண்ணாடியைப் பதிப்பதற்கு நமது ஆட்களை அனுப்பினால் என்ன நடக்கும் தெரியுமா? நிலாவிலே சிறியதாக ஒரு கண்ணாடியை பதித்து விட்டு அதுக்குப் பக்கத்திலே பெரிதாக ஒரு கல்வெட்டையும் பதித்து வைத்துவிடுவார்கள். இன்னொரு திகதியிலே இந்த கண்ணாடிப்பதிப்பு விழாவிற்கு அடிக்கல் நாட்டினார் என்று ஏதாவது அதிலே எழுதியிருக்கும்.

அதுக்கு பிறகு கொஞ்ச நாட்களிலே கண்ணாடி பதிப்பதற்கு இடம் இல்லாமல் போனாலும் போய் விடும். பூமிக்கு வெளிச்சம் கொடுக் கின்றோம் என ஆரம்பித்து அதனாலே சந்திரனும் இருட்டாகி விடுகிறது. அது மிகவும் சங்கடம் இல்லையா?

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கால்நடை விபத்துக்களை தடுக்க வீதிசமிக்ஞை பலகைகளை அமையுங்கள்

## இந்துபுரம் கிராம அபிவிருத்தி சங்கம்

(அக்கராயன்)

முல்லைத்தீவு திருமுறிகண்டியில் இருந்து கிளிநொச்சியின் இரணைமடு சந்தி வரையான ஏ-9 வீதியில் நாள் தோறும் வாகன விபத்துகளில் கால்நடைகள் உயிரிழப்பதும் படுகாயமடைவதும் நடைபெற்று வரும் நிலையில் வீதிக்கு அருகில் கால்நடைகளை பாதுகாப்பதற்கு உரிய வீதி சமிக்ஞை பலகைகளை நடுகை செய்யுமாறு இந்துபுரம் கிராம அபிவிருத்திச் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்நிலையில் வீதியின் இருமருங்கிலும் கால்நடைகள் உலாவும் இடம் என விழிப்புணர்வு பதாகைகளை நாட்டுவதன் மூலம் விபத்துகளை தவிர்த்துக் கொள்ளலாம்.

மேலும் சாரதிகள் குறித்த பகுதியில் கால்நடைகளை கருத்திற்கொண்டு வேகக் கட்டுப்பாட்டினை பேணி ஒத்துழைக்குமாறும் கால்நடை வளர்ப்பாளர்களினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (நி-5-6-350)

# புளியங்குளத்தில் தடம்புரண்ட ஹன்ரர்

## ஒருவர் காயம்



(குருமன்காடு)

வவுனியா, புளியங்குளம் பகுதியில் நெல் மூடைகளை ஏற்றிச்சென்ற வாகனம் விபத்திற்குள்ளானதில் ஒருவர் காயமடைந்துள்ளார் என புளியங்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற இவ் விபத்து குறித்து மேலும் தெரியவருவதாவது,

முல்லைத்தீவிலிருந்து நெல் மூடைகளை ஏற்றிக்கொண்டு வவுனியா நோக்கிவந்து கொண்டிருந்த ஹன்ரர் ரக வாகனம் புளியங்குளம் சந்திக்கு அண்மையில் சென்று கொண்டிருந்த போது வீதியை விட்டு விலகி விபத்திற்குள்ளானது.

விபத்தில் வாகனத்தில் பயணித்த ஒருவர் காயமடைந்தார். வாகனத்தின் முன்சக்கரம் வெடித்ததில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. விபத்து தொடர்பாக புளியங்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (நி-5-6-250)

# நசுக்கப்படும் தமிழர்களின் குரல்கள்

## வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள்

(குருமன்காடு)

எமது குரல்கள் ஓங்காத வண்ணம் தமிழர்களை அடிமைத்தனமாக வைத்திருக்கின்றனர்.

இவற்றுக்கு எதிராக நாம் அனைவரும் ஒருமித்து குரல் கொடுக்க வேண்டும் என வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளிக் சங்கத் தலைவி சிவானந்தன் ஜெனிற்றா தெரிவித்தார்.

மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தின் பொதுச்சபை கூட்டம் வவுனியா நகரசபை மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

பொதுக்கூட்டம் நிறைவில் ஊடகங்கங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

எனவே சர்வதேச நாடுகள் இதற்கு அனுசரனை வழங்காது எமக்கான சர்வதேச நீதியினை பெற்றுத்தர வேண்டும் என மேலும் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் அறவழியில் போராடுகின்ற ஒவ்வொரு போராட்டங்களையும் நசுக்குகின்ற முகமாக தடையுத்தரவுகளை விதித்து மிகவும் சட்டவிரோதமான கைதுகளை அவர்கள் முன்னெடுத்து வருகின்றனர். (நி-5-6-250)

# குளவிக்கொட்டுக்கு இலக்கான குடும்பஸ்தர் மருத்துவமனையில் அனுமதி

(நெளுக்குளம்)

புதுக்குடியிருப்பில் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று முன்தினம் குளவிக் கொட்டுக்கு இலக்கான நிலையில் புதுக்குடியிருப்பு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

புதுக்குடியிருப்பு கைவேலி பகுதியில் காற்றில் கலைந்த குளவிகள் வீட்டிலிருந்த குறித்த நபர் மீது கொட்டியுள்ளது.


குளவித் தாக்குதலுக்குள்ளான நபர் புதுக்குடியிருப்பு பிரதேச மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். (நி-5-6-299)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3064


### கஸ்தூரி




### கம்சாயினி




### ஆர்த்தி




### கார்த்திக்




### தாருசன்




### ஜெகநாத்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 431





நாற்பத்துமூன்றாம் அத்தியாயம்

"நான் குற்றவாளி!"

"சமுத்திர குமாரி! உனக்கு என்னை நினைவிருக்கிறதா?" 'பொன்னியின் செல்வ! இது என்ன கேள்வி! யாரைப் பார்த்து 'நினைவிருக்கிறதா?' என்று கேட்கிறீர்கள்? ஆயிரமாயிரம் ஆண்டுகள் கலந்து பழகிய பின்னர் 'நினைவிருக்கிறதா?' என்று கேட்பது தகுமா? அல்லது தங்களுக்குத்தான் நினைவில்லாமல் போய்விட்டதா? எத்தனை யுகம் என்னுடைய சின்னஞ் சிறு படகில் தாங்கள் ஏறி வந்திருக்கிறீர்கள்? கடலில், முடிவில்லாத கடலில், எல்லையில்லாத வெள்ள அலைகளுக்கு கிடையில், நாம் இருவரும் என் சிறு படகில் ஏறிக் கொண்டு உல்லாச யாத்திரை செய்ததையெல்லாம் மறந்து விட்டீர்களா? திடீரென்று நாலாபுறமும் கரிய இருள் சூழ்ந்து வர, நாம் இருவரும் ஒருவருக்கொருவர் துணையாக, ஒருவர் கரத்தை ஒருவர் பற்றிக்கொண்டு நெடுங்காலம் நின்றதை மறந்து விட்டீர்களா? பயங்கரமான புயல் காற்று அடித்தபோது, மலையாக எழுந்த பேரலைகள் நம்முடைய படகைத் தாக்கி, ஒரு கணம் நம்மை வான மண்டலத்துக்கு உயர்த்தி, மறுகணம் பாதாளத்தில் அழுத்தி, இப்படியெல்லாம் அல்லோலகல்லோலம் செய்த நாட்களில், நாம் இருவரும் ஒருவருக்கொருவர் ஆதாரமாக நின்று அக்கொடும் புயலை எதிர்த்து வென்றதை மறந்துவிட்டீர்களா? ஒரு சமயம் வானவெளியில் நாம் பறந்து பறந்து பறந்து சென்று கொண்டிருந்தோமே, அதை மறந்துவிட்டீர்களா? விண்மீன்களைத் தாங்கள் தாவிப் பிடித்து என் தலையில் ஆபரணங்களாகச் சூட்டினீர்களே, அதுவும் மறந்துவிட்டதா? பூரண சந்திரனை என் முகத்தருகிலே கொண்டு வந்து, 'இதோ இந்த வெள்ளித் தகட்டில் உன் பொன் முகத்தைப் பார்!' என்று சொல்லிக் காட்டினீர்களே, அதையும் மறந்து விட்டீர்களா? மற்றொரு சமயம் ஆழ்கடலிலே தாங்கள் மூழ்கினீர்கள் நான் உள்ளம் பதைபதைத்து நின்றேன் சற்று நேரத்துக்கெல்லாம் இரண்டு கைகளிலும் முத்துக்களையும் பவழங்களையும் எடுத்துக் கொண்டு வெளிவந்து அவற்றை மாலையாகக் கோத்து என் கழுத்தில் சூட்டினீர்கள்! அதைத் தாங்கள் மறந்துவிட்டாலும் நான் மறக்க முடியுமா? அரசே! உச்சி வேளைகளில், நீலநிறம் ததும்பிய ஏரிக்கரைகளில், பூங்கொத்துக்களின் பாரம் தாங்காமல் மரக்கிளைகள் வந்து வளைந்து அலங்காரப் பந்தல் போட்ட இடங்களில், பசும்புல் பாய்களில், நாம் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்த வண்ணம் எத்தனை எத்தனை எத்தனையோ நாட்கள் கழித்தோமே, அதை யெல்லாம் மறந்துவிட முடியுமா? அந்த நேரங்களில் மரக்கிளைகளில் நூறு ஜோடிக் குயில்கள் உட்கார்ந்து கீத மிசைத்ததையும், ஆயிரம் பதினாயிரம் வண்டுகள் சுற்றிச் சுற்றி வந்து ரீங்காரம் செய்ததையும், கோடி கோடி பட்டுப்பூச்சிகள் பல வர்ணச் சிறகுகளை அடித்துக் கொண்டு ஆனந்த நடனம் ஆடியதையும் நான் என்றேனும் மறக்க முடியுமா? எத்தனை ஜென்மங்களிலும் மறக்க முடியுமா? என்னைப் பார்த்து 'நினைவிருக்கிறதா?' என்று கேட்டீர்களே, அப்படிக் கேட்கலாமா?

பெண்ணே! மறுபடியும் பைத்தியக்காரி என்ற பட்டம் சூட்டிக் கொள்ளாதே! இளவரசரை நிமிர்ந்துபார்! அவர் கேட்கும் கேள்விகளுக்குக் கணீர் என்று மறுமொழி சொல்லு! உன்னை என்ன செய்துவிடுவார்? கருணை மிகுந்தவர், தயாளு என்று உலக மெல்லாம் சொல்கிறதே! பேதைப் பெண்ணாகிய உன்னை இளவரசர் என்ன செய்து விடுவார்?' "சமுத்திரகுமாரி! என்னை உனக்கு நினைவிருக்கிறதா?" என்று அவர் கேட்டது ஆழ்கடலின் அடியிலிருந்து வரும் குரல் போல் அவள் காதில் தொனித்தது.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## உதவும் நல்ல மனசு

முயலையும் அழைத்துக் கொண்டு நாளை என் இருப்பிடம் தேடி வாருங்கள். ஆனால் நான் தேர்ந்தெடுப்பவரை அழகு ராணியாக அனைவரும் ஒரு மனதாக ஏற்றுக் கொள்ள வேண்டும்!" என்று காகம் தன் முகவரி கூறியது.



"அப்படியே செய்கிறோம்" அனைத்தும் சேர்ந்து குரல் கொடுத்தன.

மறுநாள் அனைத்தும் அழகிய அழகு ராணி கனவில் மிதந்து காகத்தைத் தேடி போய்க் கொண்டு இருந்தன. அப்பொழுது குருவி ஒன்று வலியால் துடித்துக் கொண்டிருந்தது. அதன் கால்களில் காயம் தெரிந்தது. "எனக்கு யாராவது ஒருவர் உதவி செய்யுங்களேன். ஒரு சிறுவன் கல்லெடுத்து எறிந்து காலில் காயப்படுத்தி விட்டான்!" குருவி பல கீனமாக உதவி கேட்டது.

"நாங்கள் அழகிப் போட்டிக்குப் போய்க் கொண்டு இருக்கிறோம். அபசகுனமாக பேசாதே!" கடுமையாக கூறியது குரங்கு.

குருவியைப் பார்த்த எலியும், வெட்டுக்கிளியும் முகம் திருப்பி சென்று விட்டன.

முயல் குருவி அருகே தயங்கி நின்றது. பின்னர் அவசர அவசர மாக மருந்து தேடிக் காலில் வைத்து விட்டு அழகிப்போட்டிக்கு சென்றது. அழகிப் போட்டி தொடங்கியது. குறித்த நேரத்திற்கு முயல் மட்டும் செல்லவில்லை. மீதி மூன்றும் மனசுக்குள் மகிழத்தொடங்கின.

"அழகுக்கும் அறிவுக்கும் மதிப்பெண் போட்டு விட்டேன். இனி உங்கள் நல்ல குணம் பார்த்து மதிப்பெண்கள் கொடுப்பேன்! இதற்க்குத்தான் அதிக மதிப் பெண்கள் ஒதுக்கி இருககிறேன்!" காகம் கூறியதும் குருவிக்கு உதவாத மூன்றும் ஒன்றை யொன்று பார்த்துக் கொண்டன.

அப்பொழுது அரக்கப் பரக்க முயல் ஓடி வந்தது. "முயல்தான் அழகு ராணி! இதை அழகுராணியாகத் தேர்வு செய்வதற்காக நான் பெருமைப் படுகிறேன்! குருவி என் நண்பன்தான்! ஒரு ஆபத்திலிருந்து முயல் காப்பாற்றியதாக சற்று முன்பு தான் குருவி கூறியது. அப்பொழுது மூவரும் உதவாமல் சென்றது பற்றியும் சொல்லி வருத்தப் பட்டது! உதவும் நல்ல மனசு உள்ளவர்கள் தான் உண்மையில் அழகானவர்கள்!" காகம் கூறியதும் எலி, வெட்டுக்கிளி, குரங்கு ஆகியவற்றின் முகங்கள் அஷ்டகோணலாகின. (தொடரும்..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊக்குவிக்க ஆள் இருந்தால்
ஊக்கு விற்பவனும் தேக்கு விற்பான்.
– கவிஞர் வாலி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மகிழ்வான சூழமைவை வடக்கு நிர்வாகம் இழந்துள்ளது

வடக்கு மாகாணத்தின் பிரதம செயலாளராக லட்சுமணன் இளங்கோவன் அவர்கள் இன்று (15) பதவியேற்கிறார்.

வடக்கின் பிரதம செயலாளராக இளங்கோவன் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார் என்ற செய்தி, வட மாகாணத்திலுள்ள அரச அமைப்புகளிலும் பொதுமக்கள் மத்தியிலும் ஒரு மகிழ்ச்சிக்குரிய செய்தியாக உணரப்பட்டுள்ளது.

அதற்குக் காரணம் இளங்கோவன் அவர்கள் மிகச் சிறந்த நிர்வாகி. அதுமட்டுமன்றி எந்த விடயத்தையும் மனிதநேயத்துடன் கையாள்பவர்.

இதற்கு மேலாக, மற்றவர்களின் கஷ்டங்களை – மற்றவர்களின் ஆதங்கங்களை செவிமடுத்துக் கேட்கின்ற மனப்பக்குவமுடையவர்.

இவைதவிர, கிழக்கு மாகாணம் முதல் வடக்கு மாகாணம் ஈறாக இருக்கக் கூடிய அத்தனை நிர்வாக கட்டமைப்புகளின் சுழிவு நெழிவுகளையும் அறிந்திருக்கக்கூடியவர்.

வடக்குக் கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளராக இருந்து தமிழ்ச் சமூகத்தின் கல்வி வளர்ச்சிக்கு அவர் ஆற்றிய உயர்ந்த பணி என்றும் மறக்கப்படக்கூடிய தன்று.

கூடவே அவரின் நிர்வாகத்தின் கீழ் பணியாற்றியவர்கள், ஒரு மகிழ்வான சூழமைவோடு தாம் பணியாற்றியதை பொது வெளிகளில் பதிவு செய்துள்ளனர்.

இவ்வாறான சிறப்பியல்புகளைக் கொண்ட ஒருவர் வடக்கின் பிரதம செயலாளராகப் பதவியேற்பது மகிழ்வுக்குரியதே.

இந்த இடத்தில் அவரிடம் இருந்து நிறைந்த எதிர்பார்ப்புகளை வட மாகாணம் கொண்டுள்ளது.

அதில் முக்கியமாக வடக்கு மாகாணத்தில் எந்த நிர்வாகத்திலும் மகிழ்வான சூழலோடு பணியாற்றுகின்ற நிலைமைகள் இல்லாது போயுள்ளன.

ஆம், நம் உயர் அதிகாரிகளில் சிலர் அதட்டல், வெருட்டல், பழிவாங்கல் என்ற மானிய காலத்து நிர்வாகத்தைப் பின்பற்றுகின்றனர்.

இதன் காரணமாக, அரச உத்தியோகத்தர்கள் அனைவருமே ஏதோவொரு வகையில் உள நெருக்கீட்டுக்கு ஆளாகி, பதற்றத்துடனும் ஏக்கத்துடனும் பழிவாங்கிவிடுவரோ என்ற அச்சத்துடனுமே பணியாற்றுகின்றனர்.

சிலவேளை அரச உத்தியோகத்தர்களை உளநெருக்கீட்டுக்கு ஆளாக்குகின்ற உயர் அதிகாரிகளும் மனநிலைப் பாதிப்புக்கு ஆளானவர்களோ என்று எண்ணுமளவுக்கு நிலைமை உள்ளது.

எனவே இன்று பதவியேற்கும் வட மாகாண பிரதம செயலாளரிடம் நாம் முன்வைக்கக் கூடியது; வடக்கு மாகாணத்தில் ஒரு மகிழ்ச்சியான நிர்வாக சூழமைவை ஏற்படுத்துங்கள்.

அவ்வாறான சூழமைவை ஏற்படுத்துவதன் மூலம் அரச உத்தியோகத்தர்களிடமிருந்து பொதுமக்கள் மகிழ்வான சேவையை நிறைவாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

# வடக்குக்கு கிடைக்கும் நிதியை சரியாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

(கொழும்பு)

வடபகுதியின் பல் வேறு அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக பல மில்லியன் நிதியை வழங்க சீனா, இந்தியா, மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் முன்வந்துள்ளதாக தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கிடைக்கப்பெறும் சந்தர்ப்பத்தை சரியானதாக பயன்படுத்திக் கொள்வது அவசியம் எனவும் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேலும் கூறுகையில்,

பாரிய பொருளாதார நெருக்கடியை நாடு சந்தித்திருந்தாலும் தற்போதுள்ள அரசின் சரியான அரசியல் வழிநடத்தல் காரணமாக அந்த நிலையிலிருந்து நாடு தற்போது மீண்டு வருகின்ற நிலையில் வடக்கின் அபிவிருத்திக்கு இன்றைய அரசு அதிகளவான முக்கியத்துவம் கொடுத்து வருகின்றது.

அதன் அடிப்படையில் வெளிநாடுகளுடன் நாம் குறித்த நாடுகளுடன் ஏற்படுத்திக்கொண்டுள்ள இராஜதந்திர நடவடிக்கைகளின் பயனாக வடக்கின் அபிவிருத்திக்காக சீனா 1,500 மில்லியன் நிதியை வழங்க முன்வந்துள்ளது.

குறித்த 1,500 மில்லியனில் வீட்டுத்திட்டத்துக்காக 500 மில்லியனும், மக்களுக்கு அரிசி வழங்குவதற்காக 500 மில்லியனும், கடற்றொழிலாளர்களுக்கான வலை வழங்குவதற்காக 500 மில்லியனும் வழங்கப்படுகின்றது.

குறிப்பாக பிரதமர் தினேஸ் குணவர்த்தனா எதிர்வரும் 22 ஆம் திகதி சீனா செல்கின்றார். இதற்கான ஒப்பந்தத்தை சீனா செல்லும் பிரதமர் எதிர்வரும் வாரம் கைச்சாத்திடுவார் என நம்புகின்றேன்.

இதேநேரம் இந்திய அரசும் வடபகுதியின் அபிவிருத்திக்காக 3,000 மில்லியன் நிதியை வழங்க முன்வந்துள்ளது.

குறிப்பாக கடல் ஆய்வு நடவடிக்கைகள், கடற்பகுதியில் பாரியளவிலான கூடுகளில் மீன் வளர்ப்பதற்கான திட்டங்கள் மக்களுக்கான அபிவிருத்தி நடவடிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களுக்கென இந்த நிதி வழங்கப்படுகின்றது.

இதேவேளை ஜப்பான் அரசும் வடக்கின் அபிவிருத்தி மற்றும் மக்களின் கடற்பாதுகாப்பு செயற்றிட்டங்களுக்காக 415 மில்லியன் வழங்க முன்வந்துள்ளது.

அந்தவகையில் கிடைக்கின்ற சந்தர்ப்பங்களை நாம் எமது மக்களுக்கானதாக சரியான வகையில் கொண்டுசென்று மக்களின் வாழ்வியலில் சிறப்பான மாற்றத்தை உருவாக்க வேண்டும் எனவும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,10,33)

# வட்டுக்கோட்டை சந்தியில் முச்சக்கர வண்டி விபத்து

## ஒருவர் காயம்

யாழ். வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்திற்கு அருகாமையில் இடம்பெற்ற முச்சக்கர வண்டி விபத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்திற்கு அருகாமையில் உள்ள வட்டுக்கோட்டை சந்தியில் நேற்று காலை குறித்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில் விபத்தில் காயமடைந்த முச்சக்கர வண்டியின் சாரதி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

நேற்று காலை காரைநகரில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த பயணிகள் தனியார் போக்குவரத்து பேருந்து வட்டுக்கோட்டை சந்தியை கடக்க முற்பட்டபோது அராலி தெற்கு பகுதியில் இருந்து வந்த, வெதுப்பக பொருட்கள் விற்பனை செய்யும் முச்சக்கர வண்டி வேகக் கட்டுப்பாட்டை இழந்து அருகேயுள்ள வெற்றுக் காணியினுள் இருந்த கற்களின் மேல் மோதியுள்ளது.

இதனால் முச்சக்கர வண்டியின் சாரதி தலையில் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7,10)

# நெல் கொள்வனவிற்கு ரூ. 50 கோடி நிதி ஒதுக்கீடு

நெல் கொள்வனவிற்காக 50 கோடி ரூபா நிதியை ஒதுக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இணக்கம் தெரிவித்துள்ளார்.

நெல் விநியோக சபைக்கு இந்த நிதியை வழங்க அவர் தீர்மானித்துள்ளார்.

இதனடிப்படையில், இன்று முதல் அனைத்து மாவட்டங்களிலும் இரு நெற்களஞ்சியசாலைகளிலிருந்து நெல் கொள்வனவு செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, நெல் கொள்வனவிற்காக 2 பில்லியன் ரூபாவை வழங்குமாறு நிதியமைச்சிடம் கோரிக்கை விடுக்கப் பட்டிருந்தாலும் அவர்களிடமிருந்து ஆக்கபூர்வமான பதில் எதுவும் வழங்கப்படவில்லையென விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்திருந்தார்.

இதனால் விவசாய நம்பிக்கை நிதியத்திலிருந்து 250 மில்லியன் ரூபாவை பெற்றுக்கொண்டு நெற் கொள்வனவை ஆரம்பித்ததாக அவர் கூறினார்.

இந்த விடயத்தில் ஜனாதிபதி நேரடியாக தொடர்புபட்டதாகவும் இதற்கமைவாகவே 50 கோடி ரூபா நிதியை ஒதுக்கீடு செய்ய தீர்மானித்ததாகவும் விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர குறிப்பிட்டார். (ம-7,10)

# கெஹலியவுக்கு பிணை வழங்க நீதிமன்றம் மறுப்பு

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல மற்றும் முன்னாள் சுகாதார அமைச்சின் செயலாளர் உள்ளிட்டோருக்கு எதிரான தடுப்பூசி வழக்கு நிறைவடையும் வரை பிணை வழங்க நீதிமன்றம் நேற்று மறுத்துள்ளது.

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல, சுகாதார அமைச்சின் முன்னாள் செயலாளர் உள்ளிட்ட சந்தேகநபர்கள் நால்வரின் பிணை கோரிக்கையை நிராகரித்த மாளிகாகந்த நீதவான் நீதிமன்றம், வழக்கு விசாரணை முடியும் வரை அவர்களை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டுள்ளது.

குறித்த பிணை மனுக்கள் நேற்று நீதிமன்றில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே பிணை வழங்க நீதிமன்றம் மறுப்பு தெரிவித்தது. (ம-7,10)

# நிர்மாணத் துறையிலுள்ள பிரச்சினைகளை தீர்க்க

## நிபுணர் குழு நியமனம்

நிர்மாணத் துறையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை உரிய முறையில் ஆராய்ந்து தற்போதைய பொருளாதார நிலைமையில் அப்பிரச்சினைகளுக்கு வழங்கக்கூடிய தீர்வுகளைக் கண்டறிந்து அறிக்கை சமர்ப்பிக்க நிபுணர் குழுவொன்று நியமிக்கப்படவிருப்பதாக ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நிர்மாணத் துறையில் உள்ள கைத்தொழில்துறையினருடன் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற கலந்துரையாடலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

நிதி அமைச்சு, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு என்பவற்றின் செயலாளர்களை உள்ளடக்கி, துறைசார் நிபுணர்களைக் கொண்ட இந்த நிபுணர் குழுவை நியமிக்க நடவடிக்கை எடுப்பதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

கடன் மறுசீரமைப்பு பணிகள் நிறைவடைந்துள்ள நிலையில், அடுத்த வருடத்திற்குள் அனைத்து துறைகளிலும் உள்ள கைத்தொழில்துறையினருக்கு நிவாரணம் வழங்கி ஊக்கமளிக்க எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார். (ம-7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத் தாய்மொழிகள் தினம் பெப்ரவரி 21 ஆம் திகதி

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

22



திருவள்ளுவர். அவ்வையார். கம்பர். ஜி.யு.போப். கால்டுவெல். பாரதியார். பாரதிதாசன். வ.உ. சி.வீர மாமுனிவர் ஆகியோருடன் தமிழ் இலக்கிய சிலப்பதிகாரத்தில் நாயகி கண்ணகிக்கும் சிலை எடுக்கப் பட்டது.

**மூன்றாவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு**

பேராசிரியர் ஜீன்பிலியோசா, பரிசிலே மூன்றாவது அனைத்து லகத் தமிழாராய்ச்சி மாநாட்டினை 1970 இல் நடத்தினார். முன்னைய இரு மாநாடுகளுக்கும் பிரீஸ் மாநா ட்டிற்கும் பெரும் வித்தியாசம். சலசலப்பின்றி வழமை போல் நடைபெறும் கருத்தரங்கு போன்று அது அமைந்திருந்தது. முதல் மாநாட்டைப் போல் அது ஆய்வு களுக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்தது இம் மாநாடு 1970 ஜனவரி 15-18 (நான்கு நாட்கள்) காலப்பகுதியில் நடைபெற்றது. இம் மூன்று மாநாடுகளும் 2 ஆண்டு களுக்கு ஒருமுறை திட்டமிட்டபடி நடைபெற்றன.

**நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு**

1974 ஆம் ஆண்டு ஜனவரி மூன்றாம் திகதி தொடக்கம் பத்தாம் திகதி வரை தமிழ் மக்கள் தமது மொழி, பண்பாடு என்பனவற்றை உள்ளடக்கி நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு யாழ்ப்பா ணத்தில் சிறப்பாக நடாத்துவதற்கு ஏற்பாடு செய்தார்கள். மாநாடு யாழ்ப்பாணத்தில் நடைபெறுவதை அப்போது ஆட்சியிலிருந்த அரசா ங்கம் விரும்பவில்லை. அரசாங்கம் இதனை ஏற்றுக்கொள்ளாது கொழு ம்பில் நேரடியாகவும், யாழ்ப்பா ணத்தில் மாநகர மேயர் ஊடாக வும் தொடர்ச்சியான தடைகளை ஏற்படுத்தியது. அத்துடன் மாநாடு நடைபெறுவதற்கான முக்கிய அர ங்குகளின் அனுமதி இறுதி நேரம் வரை மறுக்கப்பட்டிருந்தது. மாநா ட்டில் கலந்து கொள்ள பல வெளி நாட்டு அறிஞர்களுக்கு விசா மறுக் கப்பட்டது.

இவைகள் எவ்வாறு இருந்தா லும், மாநாட்டை சிறப்பாக நடத்த வேண்டும் என்ற மனவெழுச்சி அமைப்பாளர்களிடமும், மக்களி டமும் இருந்தது. மக்கள் அலை அலையாகத் திரண்டதைக் கண்ட அரசாங்கம் சற்றுக் கீழிறங்கி மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வெளி நாட்டு அறிஞர்களுக்கு விசா வழ ங்கியது.

மாநாட்டுக் குழுத்தலைவர் நீதி யாளர் தம்பையா மாநாட்டை யாழ் ப்பாணத்தில் நடத்துவதற்கு விரும்ப வில்லை. ஆகையால் அவர் தலை வர் பதவியிலிருந்து விலகப் பேரா சிரியர் சு.வித்தியானந்தன் தலை மையில் தமிழாராய்ச்சி மாநாடு மூன்றாம் திகதி ஆரம்பமாகி பத்தாம் திகதிவரை யாழ்.முற்றவெளி திறந்த வெளியரங்கில் சிறப்பாக நடை பெற்றது. யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலிருந்தும் இலட்சக் கணக் கான மக்கள் யாழ். நகரம் வந்தார் கள். அதுவரை நடைபெற்ற எந்த வொரு மாநாடும் இதுபோல சிறப்பாக நடைபெறவில்லை. அன்றைய தினம் குடாநாடு விழாக் கோலம் பூண்டிருந்தது.

1974 ஆம் ஆண்டு ஜனவரி பத் தாம் திகதி இறுதி நாளாகக் கொண் டாடப்பட்டது. இறுதி நிகழ்வாக அறி ஞர்கள் தமிழின் பெருமைகளையும், பண்பாட்டின் பெருமையையும் பற்றிப் பேசினார்கள். மக்கள் உணர்வோடு கைதட்டி உற்சாகப்படுத்தினர். இறுதி யாகத் தமிழகப் பேராசிரியர் "நைனா முகமது" பேசிக் கொண்டிருக்கும் போது யாழ்.உதவிக்கு காவற் துறைமா அதிபர் சந்திரசேகரா தலை மையிலான காவற்துறை மாநாட்டில் கலந்து கொண்டிருந்த மக்களைத் தாக்கியதுடன், துப்பாக்கியாலும் சுட்டார்கள்.

இச் சம்பவத்தில் ஒன்பது பொது மக்கள் உயிரிழந்தார்கள். பலர் காயமடைந்தனர். அரங்குகள் சேதமடைந்தன. இம் மாநாட்டினைக் குழப்பிய யாழ்.உதவிக் காவற்றுறை அத்தியட்சகர் சந்திரசேகரா பின்னர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவர் களால் காவற்றுறை அத்தியட்சகராகப் பதவி உயர்த்தப்பட்டார்.

**10.01.1974 அன்று தமிழாராய்ச்சி மாநாட்டில் கொல்லப்பட்டோர் விபரம்:**

1. வேலுப்பிள்ளை கேசவராஜன் (வயது 15 - மாணவன்)
2. பரம்சோதி சரவணபவன் (வயது 26)
3. வைத்தியநாதன் யோக நாதன் (வயது 32)
4. ஜோன்பிடலிஸ் சிக்மறிங்கம் (வயது 52 - ஆசிரியர்)
5. புலேந்திரன் அருளப்பு (வயது 53)
6. இராசதுரை சிவானந்தம் (வயது 21 - மாணவன்)
7. இராஜன் தேவரட்ணம் (வயது 26)
8. சின்னத்துரை பொன்னுத் துரை (வயது 56 - ஆயுள்வேத வைத்தியர்)
9. சின்னத்தம்பி நந்தகுமார் (வயது 14 - மாணவன்)

இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் அறியமுடியவில்லை. இம் மாநா ட்டையும் தனிநாயகம் அடிகள் தான் ஏற்பாடுகளை செய்தார். யாழ். வீர சிங்கம்மண்டபத்தில் ஆய்வு அமர்வு களும். தமிழர் பண்பாட்டு பொருட் காட்சி சுண்டிக்குளி பெண்கள் கல்லூரி மண்டபத்திலும் நடை பெற்றன. முதல் மூன்று மாநாடு களைப் போல் இம்மாநாடு எளிதாக நடைபெறவில்லை.

**தனிநாயகம் அடிகளார்**

தனிநாயகம் அடிகளார் இலங்கை யின் யாழ்ப்பாண மாவட்டத்தில், ஊர் காவற்துறையில் கரம்பொன் என்ற கிராமத்தில் நாகநாதன் ஹென் றிஸ்ரனிசுலாசு, சிசிலியா இராசம் மாபஸ்தியாம்பிள்ளை ஆகியோ ருக்குப் பிறந்தார். அடிகளாரது தந்தை நாகநாதன், மற்றும் அவரது தந்தை வழிப்பூட்டனார் தனிநாயக முதலி ஆகியோர் நெடுந்தீவைப்பிறப்பி டமாகக் கொண்டவர்கள். தனிநாயக அடிகளின் இயற்பெயர் சேவியர் நிக்கலஸ் ஸ்ரனிசுலாசு என்பதாகும். பிற்காலத்தே இவர் தமிழில் கொண்ட தீராதகாதலினால் உரோமன் கத் தோலிக்க குருவாக நியமிக்கப்பட்ட போது தனது பெயரினை சேவியர் எஸ் தனிநாயகம் என்ற தமிழ்ப் பெயரினையும் சேர்த்துக்கொண்டார்.

தொடக்கக் கல்வியை ஊர் காவற் றுறை புனித அந்தோனியார் கல்லூரி யிலும், இடைநிலைக் கல்வியை 1920 முதல் 1922 வரை யாழ்ப் பாணம் புனித பத்திரிசியார் கல் லூரியிலும் ஆங்கில வழிக்கல்வி பயின்றார். பின்னர் 1931 முதல் 1934 வரை கொழும்பில் புனிதபேர்னாட் மறைப் பள்ளியில் சேர்ந்து இறை யியல் கல்விபயின்றார். இக்காலத்தில் ஆங்கிலம், இலத்தின், இத்தாலியம், பிரெஞ்சு.ஜேர்மன். ஸ்பானியம் , போத்துக்கீயம் ஆகிய மொழிகளை க்கற்றுத்தேர்ந்தார். தொடர்ந்து ரஷ்ய, கிரேக்க, இபுரு, சிங்களம், தமிழ் ஆகியமொழிகளைக் கற்றுத்தேர்ந்து ஒரு பன்மொழிப்புலவராகத் திகழ்ந் தார்.

திருவனந்தபுரம் மறைமாவட்ட த்தில் பணியாற்றிய போது 1934 தொடக்கம் 1939 வரை உரோமை நகரில் வத்திக்கான் பல்கலைக்கழகம் சென்று The Carthaginian Clergy என்ற தலைப்பில் முனைவர் பட்டத்திற்கான ஆய்வுக் கட்டுரை யினை எழுதி தெய்வ தத்துவத்தில் (Doctor of Divinity) பட்டம் பெற்றுக்கொண்டார். இவ் வாய்வுக் கட்டுரை 1960 இல் நூல் வடிவில் வெளியானது. இங்கு படிக்கும் போதே இவருக்கு பன்நாட்டு அறி ஞர்களின் தொடர்புகள் கிடைத்தது.

குருத்துவக்கல்வியை முடித்து அதில் பட்டம் பெற்ற பின்பு தென்னி ந்தியா திருநெல்வேலி மாவட்ட த்தில் வடக்கன்குளம் என்னும் ஊரில் உள்ள புனித திரேசா மடப் பாடசாலையில் 1940 முதல் 1945 வரை துணைத்தலைமை ஆசிரி யராகப் பணியாற்றினார். முறை யான தமிழைக் கற்கவேண்டும் என்ற ஆர்வம் அவருக்கு இங் கேயே தோன்றியது. பண்டிதர் குருசாமி சுப்பிரமணியஐயர் என்பவரிடம் தமிழ்பயில ஆரம் பித்தார். பின்னர் அண்ணாமலை ப்பல்கலைக்கழகத்தில் சேர்ந்து தமிழ் இலக்கியம் படித்தார். சங்க இலக்கியம்பற்றி ஆய்வு செய்து முதுமாணிப்பட்டம் பெற்றார்.

1945 ஆம் ஆண்டு தமிழ்இல க்கியத்தில் பட்டப்படிப்பிற்காக அண் ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து தமிழ் இலக்கியம் படித்தார். இவரது தமிழ் அறிவின் ஆழத் தினையும் முதிர்ச்சியினையும் கண்ட அண்ணாமலைப் பல்கலை க்கழக துணைவேந்தர் இரத்தின சாமி, மற்றும் பேராசிரியர் தெ.பொ. மீனாட்சிசுந்தரனாரும் எடுத்த முடிவினால் இளமாணிப்படிப்பு முடிக்காமலே நேரடியாக முது கலை மாணிப்பட்டப்பினை மேற் கொள்ள அனுமதிக்கப்பட்டார்.

அங்கு சங்க இலக்கியம் பற்றி ஆய்வு செய்து முதுகலைப்பட்டத் தைப் பெற்றுக்கொண்டார். 1947 தொடக்கம் 1949 வரை தமிழ் இல க்கியத்தில் சங்க கால இலக்கிய ச்செய்யுளில் இயற்கை என்னும் தலைப்பில் தனது ஆய்வுக்கட்டுரை யைச் சமர்ப்பித்து. எம்.லிட்.பட்டத் தையும் பெற்றுக்கொண்டார். இதில் இவர் செய்த முதல் தமிழ் ஆய்வே இவரை ஆய்வுத்துறைக்கு இட்டுச் சென்று உலகத் தமிழாய்வு வரை கொண்டு சென்றது.

1952 தொடக்கம் 1961 வரை இலங்கைப் பல்கலைக்கழகத்தில் கல்வியியலில் விரிவுரையாள ராகப் பணியாற்றினார். இலங்கைப் பல்கலைக்கழகத்தில்பணியாற்றிய காலத்தில் 1955 முதல் 1957 வரை இலண்டன் பல்கலைக்கழகத்தில் தமிழ் இலக்கியம் வழியாகக் கல்வி யியல் என்னும் தலைப்பில் ஆய்வுக் கட்டுரை சமர்ப்பித்து கல்வியிய லில்முனைவர் பட்டத்தினை இர ண்டாவது முறையாகப்பெற்றுக் கொண்டார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெப்பநிலை...

வடமேற்கு, வடமத்திய, கிழக்கு மாகாணங்களிலும் கொழும்பு, கம்பஹா, மொனராகலை, மன்னார், முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களில் சில இடங்களில் வெப்பநிலை அதிகமாக காணப்படும் எனவும் இதனால் அவதானம் செயற்படுமாறும் வளிமண்டலவியல் திணைக்களம் கேட்டுக் கொண்டுள்ளது.

இதேவேளை, தொழிலுக்காக செல்வோர் போதுமான அளவு தண்ணீரை அருந்துமாறும், நிழலான பகுதிகளில் முடிந்தவரை ஓய்வெடுக்குமாறும் வளிமண்டலவியல் திணைக்களம் கேட்டுக் கொண்டுள்ளது.

மேலும் வீடுகளில் இருக்கும் முதியவர்கள் மற்றும் நோய்வாய்ப்பட்டவர்களை கவனித்துக் கொள்ளுமாறும், குழந்தைகளை தனியாக வெளியில் செல்ல அனுமதிக்க வேண்டாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,10)

## ஐவரின்...

வருகின்ற நிலையில் அவர்களை வவுனியா சட்டத்தரணிகள் சிலர் பார்வையிட்டனர். வவுனியா வடக்கு வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தில் கடந்த சிவராத்திரி தினத்தன்று கைது செய்யப்பட்ட ஆலய பூசகர் உள்ளிட்ட 8 பேரையும் எதிர்வரும் 19ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க வவுனியா நீதிமன்று கடந்த 12ஆம் திகதி உத்தரவு பிறப்பித்தது.

இதனையடுத்து அவர்கள் வவுனியா சிறைச்சாலையில் அடைக்கப்பட்டனர். இந்நிலையில் தமக்கான நீதி வழங்கக்கோரி அவர்களில் 5 பேர் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த செவ்வாய்க்கிழமை தொடங்கிய குறித்த உண்ணாவிரத போராட்டம் மூன்றாவது நாளாகவும் நீடித்து வருகின்றது. கைது செய்யப்பட்ட எட்டு பேரில் ஆலய பூசாரியார் த.மதிமுகராசா, மற்றும் து.தமிழ்ச்செல்வன், தி.கிந்துயன், சு.தவபாலசிங்கம், விநாயகமூர்த்தி ஆகியோரே உண்ணாவிரத போராட்டத்தினை முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை அவர்கள் வழமை போல உணவினை உட்கொள்வதாக சிறைச்சாலைகள் திணைக்களத்தினால் நேற்று முன்தினம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து வவுனியாவை சேர்ந்த சட்டத்தரணிகளான கொன்சியஸ் மற்றும் திலீப்காந் ஆகியோர் நேற்று சிறைச்சாலைக்கு சென்று அவர்களை பார்வையிட்டனர்.

இதன்போது அவர்கள் உண்ணாவிரதம் இருக்கின்றமையினை அவர்கள் உறுதிப்படுத்தியிருந்தனர். (ம-7,10,250)

## வெடுக்குநாறி...

பினர்களுக்குத் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் அழைப்பு விடுத்துள்ளார்.

வவுனியா வடக்கு, வெடுக்குநாறி மலையில் கடந்த மகா சிவராத்திரி தினத்தன்று வழிபாடுகளை மேற்கொண்டவர்களைப் பொலிஸார் கடுமையாகத் தாக்கிக் கைது செய்திருந்தனர். கைதான ஆலயப் பூசகர் உட்பட 8 பேர் எதிர்வரும் 19ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளனர்.

இது தொடர்பில் அடுத்தகட்ட நடவடிக்கைகளை ஆராயும் விதமாகத் தமிழ்த் தேசியம் சார்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், வரலாற்றுப் பேராசிரியர்களுக்கும் பாராளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன் அழைப்பு விடுத்துள்ளார்.

நாளை சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் யாழ்ப்பாணம், நல்லூர், கோயில் வீதியில் அமைந்துள்ள தனது இல்லத்தில் சந்தித்துக் கலந்துரையாட வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், எம்.ஏ.சுமந்திரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன், புளொட்டின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன், ரெலோவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன், வரலாற்றுத்துறை வாழ்நாள் பேராசிரியரும் யாழ்.பல் கலைக்கழக வேந்தருமாகிய பத்ம நாதன், வரலாற்றுத்துறை வாழ்நாள் பேராசிரியர் புஷ்பரட்ணம் ஆகியோருக்கு மின்னஞ்சல் மூலம் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அந்த மின்னஞ்சலில் "மகா சிவராத்திரி தினத்தன்று வெடுக்குநாறி மலை சம்பவங்கள் அரசின் இரகசிய நோக்கங்களை எமக்குச் சுட்டிக்காட்டியுள்ளன. இந்நிலையில், எமது தமிழ் அரசியல் தலைவர்கள் ஒன்றுகூடி எமது அடுத்த கட்ட நடவடிக்கைகளைத் தீர்மானிப்பது அவசியமாகும்.

பாராளுமன்றத்தைப் புறக்கணிக்க வேண்டும் என்று கோரிக்கை ஒன்றும் விடுக்கப்பட்டுள்ளது. ஒரு சிலர் பாராளுமன்றத்துக்குள் ஒரு போராட்டம் ஒன்றை மேற்கொள்ள வேண்டும் என்கின்றனர். நாம் எடுக்கும் எந்த நடவடிக்கையாக இருப்பினும் அவை ஒன்றுபட்ட முயற்சியாக இருக்க வேண்டியது அவசியம்.

அமைச்சரின் வேண்டுகோளுக்கேற்ப வெடுக்குநாறிமலை சம்பவம் தொடர்பில் ஆராய ஜனாதிபதி குழுவொன்றை நியமிப்பதற்கு சம்மதம் தெரிவித்துள்ளார். இந்தக் குழுவில் அங்கம் வகிக்கவுள்ளவர்களின் பெயர்கள் தெரியவில்லை.

எனவே, தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களின் சந்திப்பின்போது பேராசிரியர் பத்மநாதன் மற்றும் பேராசிரியர் புஷ்பரட்ணம் ஆகியோருக்கும் அழைப்பு அனுப்பியுள்ளேன்.

பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் சம்பவ இடத்தில் இருந்ததாலும், பெறுமதியான தகவல்களை வழங்கக்கூடியவர் என்பதாலும் அவரையும் அழைத்துள்ளேன். சுமந்திரன் கைது செய்யப்பட்டவர்களுக்காக நீதிமன்றில் ஆஜராகியிருப்பதால் எமக்கு மதிப்புமிக்க ஆலோசனைகளை வழங்க முடியும் என்ற வகையில் அவரையும் அழைத்துள்ளேன்.

எதிர்வரும் 16ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு 232, கோயில் வீதி, நல்லூரில் உள்ள எனது இல்லத்தில் சந்திப்போம் என்று பரிந்துரைக்கின்றேன். எங்களுடன் இணைவீர்களா? எனத் தெரிவிக்கவும்.

மேலும் கடந்த திங்கட்கிழமை நல்லூரில் நடைபெற்ற போராட்டத்தில் தவிர்க்க முடியாத காரணங்களால் என்னால் பங்கேற்க முடியவில்லை என்றுள்ளது. (ம-7,10)

## கழுத்தறுத்து...

மாவட்டம் பெரிய நீலாவணை பொலிஸ் நிலைய பகுதியில் இடம்பெற்றுள்ளது.

தனது 29 வயதான மகன் மற்றும் 15 வயதான மகள் ஆகியோரையே தந்தை கொலை செய்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தனது பிள்ளைகளின் கழுத்தை வெட்டி இருவரையும் தந்தை கொலை செய்துள்ளதாக பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

இதையடுத்து, 60 வயதான தந்தை, தனது கழுத்தை வெட்டி தற்கொலை செய்துகொள்ள முயற்சித்த நிலையில், கல்முனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

வெட்டி கொலை செய்யப்பட்ட இரண்டு பிள்ளைகளும் மன வளர்ச்சி குன்றியவர்கள் எனத் தெரிய வருகின்றது.

பிள்ளைகளின் தாய் அண்மையில் உயிரிழந்த நிலையிலேயே, இந்த சம்பவம் நேர்ந்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ம-7,10)

தன நிதானய
திகதி - 2024.03.14
சீட்டிழுப்பு இலக்கம் - 1449
A 02 23 29 48 A
76690

மஹஜன சம்பத
திகதி 2024/03/14
சீட்டிழுப்பு இலக்கம் 5419
P 3 8 5 9 1 9

மெகா பவர்
திகதி 14/03/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1767
Z 24 24 43 60 68
26140

லக்கி 7 VIP
திகதி 2024.03.14
சீட்டிழுப்பு இலக்கம் 0245
T 1 7 9 5 3 2 T

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3661
சீட்டிழுப்பு திகதி 14.03.2024
F 16 45 61 78
F 03029

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.03.14
சீட்டிழுப்பு இலக்கம் 0728
மகரம் 02 15 43 56 மகரம்
54963 26

உத்தியோகபூர்வ முடிவுகள்
14.03.2024 வெற்றி வாரம் 127 வர்ணம் மஞ்சள்
R 3 0 2 4 2 3
M
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 31,132,716.00
DLB தொலை பேசி: 011-2 333 546-47 Web: www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2393 வர்ணம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 14.03.2024 தினம் வியாழன
26 51 64 74 C
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 78,175,945.60

சனிதா
திகதி 2024.03.14 வெற்றி வாரம் 4554 வர்ணம் சிவப்பு
23 25 50 60 O
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.52,967,350.40

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4105 வர்ணம் கபிலம்
சீட்டிழுப்பு திகதி 2024.03.14 தினம் வியாழக்கிழமை
04 05 11 37
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.11,514,752.80

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
W 03 01 10 45 51
1569
14.03.2024 வியாழன்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 511,824,682.20

அட கோடிபதி ADA KOTIPATHI
வியாழக்கிழமை
வெற்றி வாரம்: 2219
சீட்டிழுப்பு திகதி: 2024.03.14
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 98,861,062.40
26 38 45 60 R

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீனவர்...

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில், கச்சதீவை மீண்டும் இந்தியாவுக்கு வழங்க வேண்டும் என்று தமிழகத்தில் கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டு வரும் நிலையில், அதன் உரிமையை தக்க வைத்துக் கொள்வதற்காகவே இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கைகள் குறித்த பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கப்படாமலுள்ளது. என குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப் படுவதாக கேள்வி எழுப்பிய போதே இராஜாங்க அமைச்சர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழக மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கைகள் நீண்டகாலமாக காணப்படும் பிரச்சினையாகும். உண்மையில் இது எமது கடல் வளத்தை கொள்ளையடிக்கும் செயற்பாடாகும்.

சிலர் தமது அரசியலுக்காக இந்த பிரச்சினையை பயன்படுத்திக் கொள்ள முயற்சிக்கின்றனர். இப்பிரச்சினைக்கு இராஜதந்திர மட்டத்தில் தீர்வு காண வேண்டும் என்பதற்காக அமைச்சு கடின முயற்சிகளை முன்னெடுத்து வருகிறது.

இந்தியாவை விட கடுமையாக இலங்கையில் சட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன. எவ்வாறிருப்பினும் எம்மால் முன்னெடுக்கப்படும் சட்ட நடவடிக்கைகளும் போதுமானவையல்ல என்பதை நாமும் தெளிவாக அறிவோம். எவ்வாறிருப்பினும் இது கடற்றொழில் அமைச்சருடைய பொறுப்பு மாத்திரமல்ல. வடக்கு மீனவ மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் சகல அரச தலைவர்களினதும் பொறுப்பாகும்.

அரசியல் பேதங்களை துறந்து வடக்கு அரசியல் தலைவர்கள் அரசாங்கத்துடன் இணைந்து இந்தியாவுடனான பேச்சுவார்த்தைகளில் பங்கு பற்றி தமது ஒத்துழைப்புக்களை வழங்கினால் இந்த பிரச்சினைக்கு குறுகிய காலத்துக்குள் தீர்வு காண முடியும். அதனை விடுத்து தமது குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக பிரச்சினைகளை ஏற்படுத்திவிட்டு, அவற்றுக்கு தீர்வினை பெற்றுக் கொடுப்பதற்கு முன்வராமலிருப்பது ஒழுக்கமான செயற்பாடல்ல.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அல்லது கடற்றொழில் அமைச்சர் மாத்திரம் இந்தியாவுக்கு விஜயம் மேற்கொள்ளவில்லை.

ஜே.வி.பி. உட்பட பலரும் இந்தியா செல்கின்றனர். அங்கு சென்று பால் உற்பத்தி நிலையங்களுக்கு செல்பவர்கள் மீனவர்களின் பிரச்சினை குறித்து ஏன் பேசவில்லை? ஆனால் மீனவர் மீது போலியான அக்கறை கொண்டு முதலைக் கண்ணீர் வடித்துக் கொண்டு உலகில் இடம்பெறும் சகல மீனவர் மாநாடுகளிலும் பங்கேற்கின்றனர். இது கவலைக்குரிய விடயமாகும் என்றார். (ம-7,10)

## 'இந்துக்களின்...

வடக்குக்கும் தெற்குக்குமான "இந்துக்களின் போர்" என வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கும் கொழும்பு இந்துக் கல்லூரிக்கும் இடையிலான 13ஆவது கிரிக்கெட் ஆட்டம் இன்றும், நாளையும் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் இந்த வருட ஆட்டம் நடைபெறவுள்ளது. இதற்கான முன்னேற்பாடுகள் அனைத்தும் முழுமை பெற்றுள்ளன. கடந்த வருடம் இடம் பெற்ற போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி வெற்றி பெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம-7,10)

V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-8533)

சாரதி தேவை
வான், ஆட்டோ ஓடத்தெரிந்தவராகவும் அலுவலக வேலைகளுக்கு உதவுபவராகவும் இருக்க வேண்டும்.
சம்பளம்: 40'000/-
வயது: 21 முதல் 40 வரை
தொடர்புக்கு:-
0777068777
(C-8533)


மற்றுமொரு புதிய பஸ் சேவை ஆரம்பித்துள்ளனர்
Village Hotel Jaffna Express
அச்சுவேலி → புன்னாலைக்கட்டுவன் →
உரும்பிராய் → திருநெல்வேலி →
யாழ்ப்பாணம் → கொழும்பு
கட்டணம் - 2700/=
தொடர்புகளுக்கு
077 544 8503
(19118)

விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி வசதிகள்
சகல நாடுகளுக்குமான விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி (Show money) வசதிகள்
தொடர்புகளுக்கு :
074 17 37 684
(086)

பராமரிப்பு சேவை
வீட்டில் உள்ள முதியவர்கள், நோயாளர்களை உங்கள் வீட்டிலேயே தங்கி இருந்து பராமரிப்புச் சேவையை மேற்கொள்ள வேண்டுமா?
உடன் தொடர்பு கொள்ளுங்கள்
077 711 2261
(081)

பதவி வெற்றிடம்
○ கணனி தமிழ் ரைப்பிங்
○ கணனி பக்க வடிவமைப்பு
அனுபவமுள்ளவர்கள் மற்றும் பயிலுனர்கள் இருபாலாரும்
தொடர்புகளுக்கு :
076 097 3121
வலம்புரி
இல.191,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். பொது முகாமையாளர்

# அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



கடந்த 17.02.2024 சனிக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

## அமரர் நாகப்பர் நாகேஸ்வரன் (நவம்)

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் எதிர்வரும் 18.03.2024 திங்கட்கிழமை அதிகாலை 4.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று அஸ்தி கீரிமலை புனித தீர்த்தக்கரையில் கரைக்கப்படும் அதனைத் தொடர்ந்து முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நடைபெறும். அந் நிகழ்வுகளில் கலந்து அன்னாரின் ஆத்மா சாந்திக்காக பிரார்த்திப்பதோடு மறுநாள் 19.03.2024 செவ்வாய்க்கிழமை பகல் 12.00 மணியளவில் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எங்களது அழைப்பிதழ் கிடைக்கப்பெறாத பட்சத்தில் இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(071)

15 ஆம் கட்டை
உடுப்பிட்டி தெற்கு,
உடுப்பிட்டி.

இங்ஙனம்
குடும்பத்தினர்
தொ.பே. இல : 076 87 22 221

Canada & UK Visa
சகல ஆவணங்களும் சட்ட வல்லுனர் ஆலோசனையுடன் செய்து கொடுக்கப்படும்.
முறையான ஆவணங்கள் இல்லாதவர்களுக்கும் நாம் பெற்றுக்கொடுப்போம்.
எமக்கு 20 வருட அனுபவம்
Expo Net Overseas Consultants
345, Kasthuriyar Road, Jaffna.
021 222 5686
071 415 0995
021 435 5113
(078)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

காணி விற்பனைக்கு உண்டு
நெல்லியடி நகரத்தில் 15 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு
❖ நெல்லியடி நகரத்தில் இருந்து 2Km தூரத்தில்
❖ விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் இருந்து 500 m தூரத்தில்
❖ உச்சி அம்மன் கோவில் அருகாமையில்
❖ 16 அடி பாதையுடன் இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
❖ பெற்றோல் செற் முன் வீதியில் 2Km தூரத்தில் நெல்லியடி பொலிஸ் நிலைய அருகாமை வீதியில் 2Km தூரம்
❖ குடியிருப்புகள் சூழ உள்ள காணி நன்னீர் ஊற்று நிலம்
❖ ஒரு பரப்பின் விலை ஐந்து இலட்சம் ரூபாய் மட்டும் (500 000/=)
பார்வையிடும் நேரம் காலை 8மணி முதல் மாலை 6 மணி வரை
தொடர்பு : 071 173 3911, 076 853 5022
(085)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.121 பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.03.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org